# கர்நாடக சங்கீதம்

புதிய பாடத்திட்டம்

## அறிமுறை செயன்முறைப் பாடங்கள்

(தரம் 6 - 9 வரை)

பகுதி I

ஸ்ரீமதி. ஜெயந்தி இரத்தினகுமார் ~ ஆசிரியஆலோசகர்
இசைக்கலைமணி, சங்கீதகலாவித்தகர்

RangaRakes Tamilnavarasam.com

## பொருளடக்கம் பக்கம்


1. அரும்பதவிளக்கம்:—சங்கீதம், நாதம், தாளம், சுருதி, லயம், ஸ்வரம், குறில், நெடில், நிபந்தம், அநிபந்தம், ஆரோகணம், அவரோகணம், அட்சரகாலம், ஸ்தாயி ........ 1 – 5

2. நாட்டார்பாடல் ........ 5 – 5

3. திரியாங்கம், ரூபக, ஆதிதாளவிளக்கம், ஆவர்த்தம், திஸ்ர, சதுஸ்ர நடைகள் ........ 6 – 6

4. கிராமியப்பாடல் ........ 6 – 7

5. பிரக்ருதி, விக்ருதி ஸ்வரங்கள் ........ 7 – 8

6. 12 ஸ்வரஸ்தானங்கள் ........ 8 – 8

7. சர்வதேச இசைவகைகள் ........ 8 – 9

8. வகுவின் ஜாதி பேதங்கள் ........ 9 – 9

9. சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும் ........ 9 – 10

10. இசைக்கருவிகளின் பிரிவுகள் ........ 10 – 10

11. உருப்படி வஷணம்:— கீதம், ஜதிஸ்வரம், ஸ்வரஜதி, க்ருதி, கீர்த்தனை ........ 10 – 13

12. ஜனக ஜன்யராக விளக்கம் ........ 13 – 14

13. ஜன்ய ராகத்தின் பிரிவுகள்:— வர்ஜ, வக்ர, உபாங்க பாஷாங்க, நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய பிரிவுகள் ........ 14 – 15

14. வாத்தியக்கருவி – தம்புரா ........ 16 – 17

15. இராகலக்ஷணம் – மாயாமாளவகௌளை, சங்கராபரணம், மோகனம் ........ 17 – 20

16. செயன்முறைப்பாடல்கள், ஆண்டு 6. 7. 8. 9 ........ 20 – 61

17. கலாச்சாரப்பின்னணி ........ 61 – 80




RangaRakes Tamilnavarasam.com

உ

ஓம் சாய்ராம்

# சங்கீதம்

சங்கீதமென்பது செவிக்கு இன்பத்தைத் தரும் த்வனிகளைப் பற்றிய கலையாகும். அது சிறந்த கலைகளில் (Fine arts) ஒன்று. சிறந்த கலைகளாகிய லலித கலைகளில் சங்கீதம் மிக்க மேன்மையான கலையாகும். (Greatest of the fine arts). மனிதர்கள், மிருகங்கள், பண்டிதர்கள், பாமரர்கள், விருத்தர்கள், பாலர்கள் ஆகிய எல்லோருக்கும் இன்பத்தைத் தரக்கூடியது சங்கீதம்.

சங்கீதமானது கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றும் சேர்ந்தது. இவைகளுள் கீதம் என்பது வாய்ப்பாட்டு சங்கீதத்தையும், வாத்தியம் என்பது வாத்தியங்களில் வாசிக்கக்கூடிய சங்கீதத்தையும், நிருத்தியம் என்பது நாட்டியம் அல்லது நடனத்தைச் சார்ந்த இசையையும் குறிக்கும்,

சங்கீதம் பயிலுவதினால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன. மேலும் அறிவு புத்திகூர்மை, கற்பனா சக்தி, ஞாபக சக்தி, நல்லொழுக்கம் முதலியவைகளும் சங்கீதம் பயிலுவதினால் ஒருவருக்கு விருத்தியாகின்றன. பல தேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கக்கூடிய சக்தி, சங்கீதத்திற்கே உளது. உலக ஐக்கிய பாவத்தை (world consciousness) உண்டாக்கும் சக்தியும் சங்கீதத்திற்கு உண்டு. அகம்பாவம் (arrogance, ego) என்னும் துற்குணத்தை ஒழிக்கக்கூடிய சக்தி சங்கீதத்திற்கு இருக்கின்றது. சங்கீதம் பயிலுவதினால் ஒருவருக்கு, அழகான வசீகர முகவெட்டும், கவர்ச்சிகரமான தோற்றமும், தேஜஸும் உண்டாகும்.

நல்ல சங்கீதத்தைக் கேட்டு உண்மையாக அனுபவிப்பவருக்கு ரஸிகர் என்று பெயர். சங்கீதத்தை ஒரு நிகரற்ற கலை (perfect art) எனலாம்.

சங்கீதத்திற்கு காந்தர்வ வேதம் என்று பெயர். காந்தர்வ வேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று. கடவுள் வழிபாடு செய்வதற்கும், கடவுளை அறிவதற்கும் சங்கீதம் ஒரு முக்கிய ஸாதனமாகும். இக்காரணம் பற்றியே சங்கீதத்தை ஒரு வித்தையெனப் பெரியோர்கள் கூறுவர்.

சங்கீதம் ஒரு தெய்வீகமான கலை. சிவபெருமான் கையில் டமருகமும், கண்ணபிரான் கையில் குழலும், ஸரஸ்வதி தேவியின் கையில் வீணையும் இருப்பதில் ஓர் ஆழ்ந்த கருத்து உளது.

சங்கீதம் மெலாடிக்கல் சங்கீதம் என்றும் ஹார்மானிக்கல் சங்கீதம் என்றும் இரு வகைப்படும். மெலாடிக்கல் சங்கீதத்தில் ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாக வரும். (உ–ம்) ஐரோப்பிய இசை.

சங்கீதமென்பது ஒரு சிரவண கலையாகும். அதாவது காதால் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலையாகும்.

தேனையும் பாலையும் விரும்புவதைப் போல் எல்லோரும் சங்கீதத்தையும் விரும்புவார்கள். கானம் செய்யும் பொழுதும், கானத்தைக் கேட்கும் பொழுதும் நாம் இவ்வுலகக் கவலைகளை மறந்து



RangaRakes Tamilnavarasam.com

இன்பமடைகிறோம். உயர்தர சங்கீதத்தைக் கேட்குங்கால் நாம் மெய்மறந்து இன்பக் கடலில் மூழ்குவதுடன், தெய்வீக உலகத்தில் உலாவுகின்றோம் என்னும் உணர்ச்சியையும் பெறுகிறோம். இத்தகைய அரிய அனுபவம் சங்கீதத்திற்கே உரியதாகும். மனிதனுடைய துற்குணங்களைப்போக்கி, சற்குணங்களைப் பெருக்கி அவனை ஜன ஸமூகத்திற்கு ஒழுங்கானவனாக ஆக்கக்கூடிய சக்தி சங்கீதத்திற்கே உளது.

குறிப்பு:- ஆண்டு 6 இற்கு மேலே கூறியவற்றின் சுருக்கம் போதுமானது.

## நாதம்

செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனி (ஒலி) நாதமெனப்படும். நாதமானது (சப்தம்) ஒழுங்கான முறையில் உண்டாக்கப்படும் போதே உண்டாகின்றது. ஒழுங்கற்ற முறையில் சப்தம் ஒலிக்கப்படுமானால் அது இரைச்சல் எனப்படும். நாதத்திலிருந்து சுருதிகளும், சுருதிகளில் இருந்து ஸ்வரங்களும், ஸ்வரங்களிலிருந்து இராகங்களும், இராகங்களிலிருந்து கானமும் உண்டாகின்றது. நாதம் இருவகைப்படும். அவையாவன:-

1. ஆகதநாதம்
2. அநாகதநாதம்

1. **ஆகதநாதம்:-** மனித முயற்சியினால் உண்டாக்கப்படும் நாதமாகும். நாம் பாடும் சங்கீதம், வாத்தியங்களில் வாசிக்கும் சங்கீதம் முதலியவைகளெல்லாம் இவ் வகையைச் சேர்ந்தவையாகும்.
2. **அனாகதநாதம்:-** மனித முயற்சியின்றி இயற்கையினாலே உண்டாகும் நாதம். அதாவது சித்தம் தெளிந்து சிவமயமாய் விளங்கும் பெரியோர்களால் அறியப்படுவதாகும். தியாகராஜசுவாமிகள் ஒரு சிறந்த நாதயோகி ஆவார்.

## தாளம்

பாட்டின் போக்கினை கட்டுப்படுத்துவது 'தாளம்'. பாட்டை ஒரே சீராக வகைப்படுத்தி விடுவது தாளம். தாளமே சங்கீதக்கலைக்குத் தந்தை போன்றது. (லயசுத்தத்துடன் பாடப்படும் பாட்டு ரஞ்சகத்தைப் பெறுகின்றது.) தாளங்கள் அநேகம் உண்டு. எனினும் முக்கியமாக வழங்கும் தாளம் ஏழேயாகும். இவை ஸப்த தாளங்கள் எனப்படும்.

## சுருதி

ஒரு பாடலைத் தொடங்குவதற்கு அடிப்படையாக உள்ள ஒலி விசேடமே சுருதி எனப்படும். நாம் பாடுவதற்கு மத்திய ஸ்தாயி ஸட்ஜத்தையே ஆதாரமாகக் கொள்ளுவதால் அதன் அளவினையே சுருதி என்கிறோம். சுருதி சுத்தமாக இசைக்கப்படும் சங்கீதமே கேட்பதற்கு இனிமையாக இருக்கின்றது. சுருதியே சங்கீதம் என்னும், அருங்கலைக்குத் தாய் எனக் கருதப்படுகிறது. சுருதியை இரண்டு



RangaRakes Tamilnavarasam.com

வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

**1. பஞ்சம சுருதி**

**2. மத்யம சுருதி**

மத்திய ஸ்தாயி ஸட்ஜத்தை ஆதார சுருதியாகக் கொள்ளும் போது அது பஞ்சம சுருதி என்று சொல்லப்படும்.

ஆதாரமாக எடுத்துக் கொண்ட ஸட்ஜத்திற்கு மத்யமமாகிய மத்தியஸ்தாயி மத்யமத்தின் அளவை ஆதார ஸட்ஜமாகக் கொண்டு அதற்கேற்ப பாடினால், அப்போது மத்யம சுருதியில் பாடுவதாகச் சொல்லப்படும். சுருதிக்கு உபயோகிக்கப்படும் வாத்தியங்களுள் தலைசிறந்தது தம்புராவேயாகும். சுருதியின் மறுபெயர் கேள்வி எனப்படும். சங்கீதத்தில் 'மாதா' விற்கு ஒப்பிடப்படுகிறது.

## லயம்

தாளத்தின் உட்பிரிவு லயம் எனப்படும். தாளத்தை ஒரே சீராகக்கொண்டு செல்வது லயம் எனப்படும்.

"சுருதி மாதா லயம் பிதா" என்னும் கூற்றுக்கிணங்க இந்த லயமானது தந்தையின் ஸ்தானத்தை வகிக்கின்றது. லயம் மூன்று வகைப்படும்.

1. **விளம்பித லயம்** – முதலாம் காலத்தைக் குறிக்கும்
2. **மத்யம லயம்** – இரண்டாம் காலத்தைக் குறிக்கும்.
3. **துரித லயம்** – மூன்றாம் காலத்தைக் குறிக்கும்.

தாளத்தின் வேகம் லயம் எனப்படும்.

## ஸ்வரம்

இயற்கையிலேயே ரஞ்சனையைக் கொடுக்கக்கூடிய விசேஷத்தன்மை வாய்ந்த த்வனிக்கு ஸ்வரம் என்று பெயர். இவ்வித ஸ்ரவங்கள் ஏழு ஆகும். இவை முறையே ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பன. இவைகள் சப்த ஸ்வரங்கள் என்று சொல்லப்படும். இந்த ஸ்வரப் பெயர்களின் முதலெழுத்துக்களாகிய ஸ, ரி, க, ம, ப, த, நி என்பவைகளையே நாம் பாடுகிறோம். இந்த ஸப்த ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டே கானம் இசைக்கப்படுகின்றது. ஸ்வரங்களுக்கு தாது என்றும் பெயர் உண்டு.

## குறில், நெடில்

இசையில் ஸ்வரங்களின் காலத்தைக் காட்டுவதற்கு இவை உபயோகப்படுத்தப்படுகின்றன.
குறில் ஸ்வரங்களுக்கு ஒரு அட்சர காலமும்



RangaRakes Tamilnavarasam.com

நெடில் ஸ்வரங்களுக்கு இரண்டு அட்சர காலமும் ஆகும்.

ஸ – குறில் ஸ்வரம் 1 அட்சரகாலம்
ஸா – நெடில் ஸ்வரம் 2 அட்சரகாலம்.

## நிபந்தம், அநிபந்தம்

**நிபந்தம்:-** தாளக்கட்டுப்பாட்டிற்குள் அமைந்த இசைப்பாடல்களை நிபந்தம் என்று அழைப்பர். உ–ம் வர்ணம், கீர்த்தனை.

**அநிபந்தம்:-** தாளக்கட்டுப்பாட்டிற்குள் அமையாத இசைப்பாடல்களை அநிபந்தம் என்று அழைப்பர். உ–ம் வெண்பா, விருத்தம்.

## ஆரோகணம், அவரோகணம்

**ஆரோகணம்:-** ஏழு ஸ்வரங்களும் சுருதியில் முறையே கூடிக்கொண்டு செல்வதை ஆரோகணம் என்பர். தமிழிசையில் இதனை ஆரோசை என அழைப்பர். ஏறுநிரை என்றும் அழைப்பர்.




**அவரோகணம்:-** ஏழு ஸ்வரங்களும் சுருதியில் குறைந்து வருவதை அவரோகணம் என்பர். தமிழிசையில் அமரோசை என அழைப்பர். இறங்கு நிரை என்றும் அழைப்பர்.

## அட்சரகாலம்

ஸ்வரங்களை அவற்றின் கால அளவிற்கேற்ப பாடுவதற்கு அக்ஷரகாலங்கள் அடிப்படையானவை. குறில் ஸ்வரமொன்றின் அக்ஷரகாலம் ஒன்று. நெடில் ஸ்வரமொன்றின் அக்ஷரகாலம் இரண்டு. இக்குறியின் அட்சரகாலம் இரண்டு.



RangaRakes Tamilnavarasam.com

| ஸ்வரங்கள் | மொத்த அட்சர காலங்கள் |
|---|---|
| ஸ | 1 |
| ஸா | 2 |
| ஸா, அல்லது ஸ,, | 3 |
| ஸா; அல்லது ஸ,,, | 4 |

## ஸ்தாயி

ஸ்தாயி என்பது ஸ்வரக் கூட்டத்தின் எல்லையைக் குறிக்கும். ஸட்ஜம் முதல் நிஷாதம் வரையிலுள்ள ஸ்வரக்கோர்வையை அல்லது ஸ்வர எல்லையை ஒரு ஸ்தாயி என்கிறோம். இது தமிழ் இசையில் நிலை என்று கூறப்படும். ஸ்தாயி மூன்று வகைப்படும்.

1. **மந்திரஸ்தாயி:-** கீழ்ஸ்தாயி, தக்குஸ்தாயி, நீசஸ்தாயி எனவும் தமிழிசையில் வலிவு எனவும் பெயர் பெறும்.
2. **மத்தியஸ்தாயி:-** சமஸ்தாயி எனவும் தமிழிசையில் சமம் எனவும் பெயர் பெறும்.
3. **தாரஸ்தாயி:-** மேல்ஸ்தாயி, ஹெச்சுஸ்தாயி எனவும் தமிழிசையில் மெலிவு எனவும் பெயர் பெறும்.




## நாட்டார் பாடல்

பாமரமக்கள் முதல் பண்டிதர் வரை சுவைத்து அனுபவிக்கக் கூடிய தன்மையைக் கொண்ட கிராமியப் பாடல்கள் பாமர ஜனகானம், பொதுஜனகானம் எனப்பலவாறு அழைக்கப்படும். இப்பாடல்களின் வர்ண மெட்டுக்கள், தாள நடைகள் சுலபமானதாக அமைக்கப்பட்டிருக்கும். மனித வாழ்க்கையோடு ஒவ்வோர் கட்டத்திலும் நாட்டுப்பாடலின் பிரதிபலிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. நாட்டார் பாடல்கள் சிந்து, லாவணி பாணியில் அமைந்திருக்கும். நாட்டார் பாடல்களில் உடுக்கு, மகுடி, முரசு போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டார் பாடல்கள் பாமரமக்களின் பொக்கிஷம் என்பதால் அதனை அழித்து விடாது பாதுகாக்கப்பட வேண்டியது எமது பணியாகும்.



RangaRakes Tamilnavarasam.com

## திரியாங்கம்

நாம் தாளம் போடும் போது செய்யும் செய்கைகளில் ஆறு அங்கங்கள் உண்டு. இவற்றில் மூன்று அங்கங்களே பிரதானமாகக் கைக்கொள்ளப்படுபவை. அதுவே திரியாங்கம் ஆகும். திரி என்றால் மூன்று. இவற்றை முறையே லகு, த்ருதம், அனுத்ருதம் என்பர்.

லகு I — ஒரு தட்டும் மூன்று விரல் எண்ணிக்கையும்.

த்ருதம் O — ஒரு தட்டும் ஒரு வீச்சும்.

அனுத்ருதம் U — ஒரு தட்டு மாத்திரம்

உதாரணமாக ஜம்பைதாளத்தை எடுத்துக்கொண்டால் I, O, U என்ற மூன்று அங்கங்களும் அமைந்துள்ளன.

## ரூபக ஆதிதாள விளக்கம்

**ரூபகதாளம்:-** ரூபகதாளத்திற்கு இரண்டு அங்கங்கள் உள்ளன. அவை த்ருதம், லகு. குறியீடு 0I. இத் தாளத்திற்குரிய செய்கை ஒரு தட்டு ஒரு வீச்சு விரல் எண்ணுதல் ஆகும்.

**ஆதிதாளம்:-** இதற்கு மூன்று அங்கங்கள் உள்ளன. அவை லகு த்ருதம், த்ருதம், குறியீடு I O O. சதுஸ்ரஜாதி திரிபுடை தாளத்தின் பெயர்.

## ஆவர்த்தம்

ஒவ்வொரு தாளமும் பல அங்கங்களைக் கொண்டது. தாளத்தின் அங்கங்கள் யாவற்றையும் ஒரு முறை போட்டு முடிப்பதற்கு ஓர் ஆவர்த்தம் என்று கூறப்படுகிறது. உதாரணமாக அடதாளத்தை எடுத்துக்கொண்டால் $I_5$ $I_5$ O O இரண்டு லகு, இரண்டு த்ருதங்களையும் போட்டு முடித்தால் ஓர் ஆவர்த்தம் முடிந்ததாக கணக்கிட வேண்டும்.

## திஸ்ர, சதுஸ்ர நடைகள்

**திஸ்ரநடை:-** இதன் அட்சர எண்ணிக்கை மூன்று. இதற்குரிய மிருதங்கச் சொல் "தகிட" என்பதாகும்.

**சதுஸ்ரநடை:-** இதன் அட்சர எண்ணிக்கை நான்கு. இதற்குரிய மிருதங்கச் சொல் "தகதிமி" என்பதாகும்.

## கிராமியப்பாடல்கள்

பாமர மக்கள் முதல் பண்டிதர் வரை சுவைத்து அனுபவிக்கக் கூடிய தன்மையைக் கொண்ட கிராமியப் பாடல்களை நாட்டார் பாடல்கள், பொதுஜன கானம், பாமர ஜனகானம், நாடோடிப் பாடல்



RangaRakes Tamilnavarasam.com

எனப் பலவாறு அழைக்கலாம். இப்பாடல்கள் எத்தேசமானாலும் ஒரேவகை அம்சங்களையே கொண்டிருக்கும். சாஸ்திரீய கலைக்கு முற்பட்டது என்று கருதப்படும் இப்பாடல்களுக்கு இலக்கணம் வகுக்கப்படவில்லை.

நாட்டுப் பாடல்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பாட்டுப் பாடுவது மனிதனுக்கு இயல்பாகவே தோன்றுகிறது. இயற்கையிலே ஆதி மனிதன் நெஞ்சைப் பறிகொடுத்திருப்பான். ஒத்திசை பொருந்திய ஒலிகளால் உள்ளம் தூண்டப்பெற்று தானும் குரல் ஒலி எழுப்பி மகிழ்ந்த மனிதனுக்கு மொழி துறையாக வந்தபோது பாடல் தோன்றியிருக்கும். கூட்டம் கூட்டமாக வாழ்ந்த நிலையில் ஒருவரைப் பின்பற்றி பலரும் பாடியிருப்பர். ஒருவர் ஓர் அடி பாட மற்றவர் அடுத்த அடியைப் பாடியும், ஒருவர் வினா கேட்க மற்றவர் விடையளித்தும் பேச்சு வழக்கு மொழியிலே பாடிய சூழ்நிலையில் பல்வகையான நாட்டுப் பாடல்கள் தோன்றியிருக்கக்கூடும்.

நாட்டுப்பாடல்கள் கவர்ச்சிகரமான இசையிலும், சுலபமான தாளங்களிலும் இலகுவான இராகங்களிலும் அமைந்திருக்கும். தாளக் கட்டுப்பாடும் விஸ்தீரணமும் அற்றன. ஆனந்தபைரவி, புன்னாகவராளி, நவரோஜ், குறிஞ்சி, நாதநாமக்கிரியை போன்ற இராகங்களில் பாடப்பட்டு வருகின்றன.

மனிதனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் நாட்டுப்பாடலின் பிரதிபலிப்பைக் காணக்கூடியதாக இருக்கிறது. மருத்துவிச்சி வாழ்த்து, அன்னையின் தாலாட்டு, விளையாட்டுப்பாடல், ஊஞ்சற் பாடல், நலங்குப் பாடல் போன்ற பாடல்களும், இறக்கும் போது ஒப்பாரிப் பாடல்களும் பாடப்படுகின்றன.

நாட்டுப்பாடல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. வேலை செய்யும் காலங்களில் பாடப்படுவன.
2. விசேட காலங்களில் பாடப்படுவன.
3. ஓய்வு நேரங்களில் மன உற்சாகதிற்காகப் பாடப்படுவன.

பிரதேச ரீதியிலான வேறுபாடுகளைக் கொண்ட பாடல்கள் உள. நம் நாட்டில் கடலில் மீன்பிடிப்போர் பாடும் ஓடப் பாட்டு, கப்பற்பாட்டு, தோணிக்காரன் பாடல் போன்ற பாடல்களும் வயலில் வேலை செய்யும் உழவர் ஏற்றப்பாடல், ஏர்ப்பாடல், அரிவு வெட்டுப்பாடல், அறுவடைப்பாடல் போன்ற பாடல்களும், மலைப்பிரதேசத்தினர், தோட்டத்தொழிலாளர் பாடும் பாடல்களும் எம்மிடையேயுண்டு.

இவை தவிர கடவுள் வழிப்பாட்டுப் பாடல்கள், சடங்குப் பாடல்கள் போன்ற பாடல்களும், வசந்தன் பாடல்கள், நாடகப்பாடல்கள், கதைப்பாடல்கள் போன்றவையும் நாட்டுப்பாடல்களில் உண்டு.

இவ்விதம் நாட்டுப்பாடல்கள் நம் நாட்டின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடத்தக்க பல்சுவை கொண்டனவாக விளங்குகின்றன.

## பிரக்ருதி விக்ருதி ஸ்வரங்கள்

ஸப்த ஸ்வரங்கள் பிரக்ருதி ஸ்வரங்கள், விக்ருதி ஸ்வரங்கள் என இருவகைப்படும்.

**பிரக்ருதி ஸ்வராங்கள்:-** இயற்கையான த்வனியுடன் ஒரேவிதமாக மாறுதல் அடையாமல் இருக்கும் ஸ்வரங்கள். ஸட்ஜம், பஞ்சமம், பிரக்ருதி ஸ்ரவங்களாகும். இவை பேதம் அடைவதில்லை. இயற்கைஸ்வரம்,



RangaRakes Tamilnavarasam.com

அசலஸ்வரம் எனவும் அழைப்பர்.

**விக்ருதி ஸ்வரங்கள்:-** மற்ற ஐந்து ஸ்வரங்களாகிய ரிஷபம், காந்தாரம், மத்யமம், தைவதம், நிஷாதம் ஆகியவை விக்ருதி ஸ்வரங்களாகும். அதாவது பேதம் அடையும் ஸ்வரங்களாகும். செயற்கை ஸ்வரம் எனவும் அழைப்பர்.

## 12 ஸ்வரஸ்தானங்கள்

ஸப்த ஸ்வரங்களும் பிரக்ருதி, விக்ருதி பேதங்களினால் 12 ஸ்வரஸ்தானங்களைப் பெறுகின்றன. குறைந்த சுருதியை உடைய ஸ்ரவங்கள் கோமள ஸ்வரங்கள் எனவும், கூடிய சுருதியை உடைய ஸ்வரங்கள் தீவிர ஸ்வரங்கள் எனவும் அழைக்கப்படும்.

ஸ்வரஸ்தானங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | ஸட்ஜம் | பிரக்ருதி |
| 2. | சுத்தரிஷபம் | கோமளம் |
| 3. | சதுஸ்ருதி ரிஷபம் | தீவிரம் |
| 4. | சாதாரண காந்தாரம் | கோமளம் |
| 5. | அந்தர காந்தாரம் | தீவிரம் |
| 6. | சுத்த மத்திமம் | கோமளம் |
| 7. | பிரதி மத்திமம் | தீவிரம் |
| 8. | பஞ்சமம் | பிரக்ருதி |
| 9. | சுத்ததைவதம் | கோமளம் |
| 10. | சதுஸ்ருதி தைவதம் | தீவிரம் |
| 11. | கைசிகி நிஷாதம் | கோமளம் |
| 12. | காகலி நிஷாதம் | தீவிரம் |

## சர்வதேச இசைவகைகள்

சர்வசே இசை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன.

1. மெலடி (Melody)
2. பாலிபோனி (Polyphony)
3. ஹார்மோனி (Harmony)

மெலாடிக்கல் சங்கீதத்தில் (Melodical music) ஒற்றை ஸ்வரங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாய் ஒரு முறையை அனுசரித்து வரும்..

பாலிபோனி (Polyphony) சங்கீதத்தில் ஒரு முறையைத் தழுவி அமைக்கபட்டுள்ள பல கீதங்கள் ஒரே தருணத்தில் வாசிக்கப்படும். ஹார்மோனிக்கல் சங்கீதத்தில் ஸ்வரத் தொகுதிகள் அல்லது ஸ்வர



RangaRakes Tamilnavarasam.com

அடுக்குகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாய் வரும். அதாவது ஒரு ஸ்வரத்தை வாசிக்கும் பொழுதே அதன் இணை ஸ்வரங்களும் நட்பு ஸ்வரங்களும் கூடவே வாசிக்கப்படும். இந்தியா முதலிய கீழ்நாட்டுப் பிரதேசங்களில் மெலாடிக்கல் சங்கீதத்தைக் கேட்கலாம். ஐரோப்பிய நாகரீகம் பரவியிருக்கும் மற்றைய தேசங்களில் பாலிபோனி சங்கீதத்தையும் ஹார்மோனிக்கல் சங்கீதத்தையும் கேட்கலாம்.

இந்திய சங்கீதத்தை ராக சங்கீதம் என்று கூறுவர். ராக சங்கீதத்திலுள்ள நுண்மையான சுருதிகள், கமகங்கள், அருமையான இசைத் தத்துவங்களை மேல் நாட்டு சங்கீதத்தில் காண முடியாது.

## லகுவின் ஜாதி பேதங்கள்

ஜீவராசிகளுக்கு அங்கங்கள் எவ்விதம் முக்கியமோ அதே போன்று தாள அங்கங்களும் தாளத்துக்கு முக்கியமானவை என்றும் அவற்றுள் பிரதானமானவை திரி அங்கங்கள் (லகு, த்ருதம், அனுத்ருதம்) ஆகும்.

தாள அங்கங்களில் எண்ணிக்கையில் மாற்றமடையும் அங்கம் லகுவாகும். அது ஐந்து வகையாக மாற்றமடையும். இதையே லகுவின் ஜாதி மாற்றமென அழைக்கிறோம்.

ஜாதி மாற்றமடையும் போது லகுவின் குறியீடு $I_3 I_4 I_5 I_7 I_9$. இதன் அட்டவணை வருமாறு–

| எண் | ஜாதியின்பெயர் | குறியீடு | கிரியை முறை |
|---|---|---|---|
| 1. | திஸ்ரலகு | $I_3$ | ஒருதட்டும் 2 விரல் எண்ணிக்கையும் |
| 2. | சதுஸ்ரலகு | $I_4$ | ஒருதட்டும் 3 விரல் எண்ணிக்கையும். |
| 3. | கண்டலகு | $I_5$ | ஒருதட்டும் 4 விரல் எண்ணிக்கையும் |
| 4. | மிஸ்ரலகு | $I_7$ | ஒருதட்டும் 6 விரல் எண்ணிக்கையும் |
| 5. | சங்கீர்ணலகு | $I_9$ | ஒருதட்டும் 8 விரல் எண்ணிக்கையும் |

## சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்

சப்த தாளங்கள் என்றால் ஏழு தாளங்கள் ஆகும். சப்த தாளங்களில் வரும் அங்கங்கள் அனுத்ருதம் த்ருதம், லகு.

அனுத்ருதம் – தட்டுமட்டும்

த்ருதம் – தட்டும் திருப்புதலும்

லகு – தட்டும் விரல் எண்ணுதலும்



RangaRakes Tamilnavarasam.com

## சப்த தாளங்களின் பெயர்களும் குறியீடுகளும்.

| எண். | சப்த தாளங்களின் பெயர்கள் | குறியீடுகள். |
|---|---|---|
| 1 | த்ருவதாளம் | 1011 |
| 2. | மட்டியதாளம் | 101 |
| 3. | ரூபகதாளம் | 01 |
| 4. | ஜம்பைதாளம் | 1U0 |
| 5. | திரிபுடைதாளம் | 100 |
| 6. | அடதாளம் | 1100 |
| 7. | ஏகதாளம் | 1 |

## இசைக்கருவிகளின் பிரிவுகள்

இசையொலிகளின் பல நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும், இசையறிவில் வளர்ந்து இசையின் அழகைத்துய்ப்பதற்கும், சிறப்பாக மொழிகலவாத் தனியிசையின் மேன்மையை உணர்வதற்கும் இசைக்கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன.

இசைக்கருவிகளைப் பொதுவாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. **நரம்புக்கருவி:-** மரத்தினாலாக்கப்பட்டு நரம்புகள் அல்லது தந்திகள் பூட்டப்பட்டது. வீணை, வயலின், தம்புரா, சித்தார், கோட்டுவாத்தியம் முதலியன. தந்திகளில் அதிர்வு ஏற்படுவதால் ஒலி உண்டாகும்.

2. **துளைக்கருவி: -** மரத்தினால் துளையுடன் செய்யப்பட்டிருக்கும், புல்லாங்குழல், நாதஸ்வரம், முகவீணை, ஹார்மோனியம் முதலியன. குழாயினிலுள்ள வளி நிரல் அதிர்வதால் ஒலி உண்டாகும்.

3. **தோற்கருவி:-** மரத்தினால் செய்யப்பட்டுத் தோலால் மூடப்பட்டிருக்கும். மத்தளம், தவில், கஞ்சிரா, மிருதங்கம் முதலியன. இழுக்கப்பட்ட நிலையிலுள்ள தோல் அதிர்வதால் ஒலி உண்டாகும்.

4. **கஞ்சக்கருவி:-** வெண்கலத்தினால் செய்யப்பட்டவை. தாளம், ஜால்ரா முதலியவை. உலோகத்துண்டு அதிர்வதால் ஒலி உண்டாகும்.

## உருப்படிகளின் லக்ஷணம்

### கீதம்

உருப்படிகளில் மிகவும் எளிதானது கீதம். கீதங்கள் ஒரே காலத்தில் அமைந்திருக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் கீதங்களில் இல்லை. சுலபமான நடையிலே



RangaRakes Tamilnavarasam.com

அமைந்திருக்கும். அஇியா, திஇயு, அஇயம், வாஇய முதலிய சொற்களைக் கீதங்களில் காணலாம். இவைகளுக்கு "மாத்ருகா" பதங்கள் என்றும் கீதாலங்கார சொற்கள் என்றும் பெயர். சங்கீத அப்பியாச முறையில் அலங்காரங்களுக்குப் பின்னர் கீதங்கள் கற்பிக்கப்படும். கீதங்கள் இருவகைப்படும்.

1. சஞ்சாரி கீதம் 2. இலட்சணகீதம்

**சஞ்சாரி கீதம்:**

இதனை சாமானிய கீதம் என்றும் சாதாரண கீதம் என்றும் அழைப்பர். சஞ்சாரி கீதமானது இராகத்தின் களையைத் தெளிவாக உணர்த்தும். இதன் சாகித்தியம் தெய்வத்துதியாகவும் பல புதுப்புதுக் கருத்துக்களை உணர்த்தும் சாகித்தியங்களைக் கொண்டு அமைந்திருக்கும். இதற்கு அங்க வித்தியாசங்கள் இல்லை. சஞ்சாரி கீதம் இயற்றியவர் புரந்தரதாசர், இராமாமாத்யர்.

**இலட்சண கீதம்:**

இக்கீதம் எந்த ராகத்தில் அமைந்துள்ளதோ அவ்ராகத்தின் இலட்சணத்தை சாகித்தியத்தில் விளக்கியிருக்கும். இலட்சண கீதம் இயற்றியவர் வேங்கடமகி, கோவிந்த தீட்ஷிதர்.

## ஜதிஸ்வரம்

அப்பியாசகான வகுப்பைச் சேர்ந்த ஒரு வகை உருப்படி. இது தாதுவின் அமைப்பில் ஸ்வரஜதியை ஒத்திருக்கும். ஜதிக் கோர்வைகளை ஆதாரமாகக்கொண்டு மெட்டுக்களால் அமைக்கப்பட்டமையால் இவ்வுருப்படி "ஜதிஸ்வரம்" எனப்படுகிறது. இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களையுடையது. சில ஜதிஸ்வரங்கள் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும். இவ்வுருப்படி ஜதி அமைப்பில் இருப்பதனால் இது மிருதங்கத்தில் வாசிப்பதற்கு ஏதுவாக இருப்பதுடன் கேட்போருக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது, இவ்வுருப்படி நாட்டியத்திற்கு உகந்தது. ஜதிஸ்வரங்களைக் கற்பதனால் மாணவர்களின் ஸ்வர, லய, ஞானம் விருத்தியடைகிறது.

ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் இவ்வுருப்படி இராகமாலிகையாகவும் அமைந்துள்ளது. சௌக்ககாலத்திலும் மத்திம காலத்திலும் அமைக்கபட்ட ஜதிஸ்வரங்களும் உண்டு. ஸ்வாதித் திருநாள் மஹாராஜாவும், பொன்னையாபிள்ளையும் இவ்வகை உருப்படியை இயற்றியிருக்கிறார்கள்.

## ஸ்வரஜதி

ஸ்வரஜதிக்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் உண்டு. பல சரணங்களையுடைய உருப்படிகளில் இதுவும் ஒன்று. சரணங்கள் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும். சில ஸ்வரஜதிகளில் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும். ஸ்வரஜதிகளின் சாகித்தியம் பக்தி, காதல், வீரம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். ஸ்வரஜதிகள்



RangaRakes Tamilnavarasam.com

பொதுவாக அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படிகளான போதிலும் சியாமா சாஸ்திரிகளின் ஸ்வரஜதிகள் சபாகானத்திற்கும் உகந்தவை. நாட்டியத்திற்காக ஏற்பட்ட ஸ்வரஜதிகளில் ஆங்காங்கு ஜதிகள் காணப்படும். ஸ்வரஜதிகளைச் செய்த சில வாக்கேயகாரர்கள்: சியாமா சாஸ்திரிகள், ஸ்வாதித் திருநாள் மஹாராஜா, பொன்னையா பிள்ளை, சின்னிகிருஷ்ண தாஸர்.

## கிருதி

இசை வடிவங்களில் மிகச் சிறந்ததும் அரங்கிசை வகைகளில் மிக முக்கியமானதும் ஆவது கிருதி. இது கீர்த்தனையில் இருந்து உண்டான உருப்படியாகும். இதற்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்கள் உண்டு. பல சரணங்கள் இருந்தால் வெவ்வேறு மெட்டுக்களில் அமைந்திருக்கும். சில கிருதிகளில் அனுபல்லவி இருக்காது. அப்போது சரணத்திற்கு 'சமஷ்டி சரணம்' என்று பெயர். இதன் சாகித்தியம் இறைவனைப் பற்றியதாகவோ அல்லது உலகியலைப் பற்றியதாகவோ இருக்கலாம். கிருதிகள் எல்லாவிதமான இராகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இராகங்களின் வடிவம் அழிந்து போகாமல் இருப்பதற்குக் கிருதிகளே காரணம் என்று கூறினால் அது மிகையாகாது.

கிருதியில் பல்லவி, அனுபல்லவி, சரணங்கள் ஒரே எடுப்பிலும் வெவ்வேறு எடுப்புக்களிலும் ஆரம்பிக்கும். கச்சேரிகளில் இவ்வுருப்படி முக்கிய இடத்தை வகிக்கின்றது. கிருதிகளில் பல சங்கதிகள் உண்டு. சங்கீதக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களே கிருதி என்னும் உருப்படியை திறமையாகக் கையாளலாம். கிருதிகளுக்கு தாது சம்பந்தமான அணிகளாக விளங்குபவை சிட்டை ஸ்வரம், சொற்கட்டு ஸ்வரம், மாது சம்பந்தமான அணிகளாக ஸ்வராட்சரம், மணிப்பிரவாள சாகித்தியம் என்பன இடம்பெறுகின்றன. கிருதிகளை இயற்றியுள்ள இசைவாணர்கள்: தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரி, முத்துஸ்வாமி தீட்சிதர், வீணை குப்பய்யர்.

## கீர்த்தனை

கீர்த்தனை இறை இசைப்பகுதியைச் சேர்ந்தது. சாகித்தியம் இறைவன் அல்லது இறைவியைப் புகழ்வதாகவோ அல்லது அவர்களிடம் மன்னிப்பு வேண்டுவதாகவோ இருக்கலாம். சாகித்தியம் பக்தி நிரம்பியதாகவும், புராண நிகழ்ச்சிகளைப் பற்றியதாகவும், பக்தர்களின் உணர்ச்சிகளைத் தெரிவிப்பதாகவும் இருக்கலாம். எனவே கீர்த்தனைகளில் ஸ்வரப்பகுதியை விட சொற்பகுதியே முக்கியமானது என்று கருதப்படும். சாகித்தியத்தைப் பாட தாது கருவியாக உபயோகப்படுகின்றது. கீர்த்தனைக்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற 3 பகுதிகள் உண்டு. கீர்த்தனை அநேகமாக பிரபல்யமான இராகங்களிலும் சுலபமான தாளங்களிலுமே அமைந்திருக்கும். சாதாரண இசையறிவு உள்ளவர்களும் கீர்த்தனைகளைப் பாட இயலும். பலர் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றதாகவும் இருக்கும். கீர்த்தனைகளை இயற்றியவர்கள்: முத்துத்தாண்டவர், புரந்தரதாசர், சின்னையா, தியாகராஜ சுவாமிகள், கோபால கிருஷ்ண பாரதியார். இது சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது.



RangaRakes Tamilnavarasam.com

# கிருதிக்கும் கீர்த்தனைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை

**ஒற்றுமை**

1. பல்லவி அனுபல்லவி சரணம் என்ற அங்கங்கள் இரண்டிற்கும் உண்டு.
2. சரணங்களுள் வரும் பதங்கள் ஒரேயளவாக இரண்டிலும் காணப்படும்.
3. தாது, மாது எனும் அம்சங்கள் இரண்டிலும் உண்டு.
4. இரண்டும் சபா கானத்திற்கு ஏற்ற உருப்படிகளாகும்.

**வேற்றுமை**

1. கிருதிகளில் 3 அல்லது 5 சரணங்களுக்கு மேல் பெரும்பாலும் இருக்காது. கீர்த்தனையில் 10, 12, 16 சரணங்களும் இருக்கலாம்.
2. கீர்த்தனைகளில் அனுபல்லவி இருக்க வேண்டிய அவசியம் இல்லை.
3. கிருதிக்கு மதிப்புக் கொடுப்பது அதன் தாது. கீர்த்தனைக்கு மதிப்புக் கொடுப்பது அதன் மாது.
4. கீர்த்தனங்கள் 500 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டது. கிருதி கீர்த்தனையிலிருந்து உண்டான உருப்படி.
5. கீர்த்தனைகளில் அவற்றின் சாகித்தியமே முக்கியமாகும். கீர்த்தனைகள் சாமான்ய ராகங்களிலும் எளிதான இசைமெட்டிலும் அமைந்திருக்கும். ஆனால் கிருதியில் இசை முக்கியமான அம்சமாகும். இராகபாவத்தை விரிவாகக் காட்டுவதற்கும் கானரசம் அல்லது இசை இன்பம் உண்டாவதற்கும் கிருதிகள் இயற்றப்பட்டுள்ளன.

## ஜனக ஜன்ய ராகவிளக்கம்

**ஜனகராகம்:-**

இந்திய சங்கீதத்தின் அம்சம் இராகமாகும். இராகங்களில் ஜனகராகம், ஜன்யராகம் என்று இருபிரிவுகள் உண்டு. ஜனகராகம் என்பது மேளகர்த்தா இராகமாகும். இதற்கு கர்த்தா இராகம், தாய் இராகம், சம்பூர்ணராகம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. கர்நாடக சங்கீதத்தில் 72 ஜனகராகங்கள் உள்ளன. ஜனக ராகங்களின் முக்கிய லட்சணமாக விளங்குபவை.

1. சம்பூர்ண ஆரோகண அவரோகணம்.
2. கிரம சம்பூர்ண ஆரோகண, அவரோகணம்.
3. ஆரோகணத்தில் வரும் அதே ஸ்வரஸ்தானங்கள் அவரோகணத்திலும் வரும்.
4. அஷ்டகமாக விளங்கும் ஆரோகண– அவரோகணம்.

ஹனுமதோடி, மாயாமாளவகௌளை, தீரசங்கராபரணம், மேசகல்யாணி இவைகள் யாவும் ஜனகராகங்கள் ஆகும்.



RangaRakes Tamilnavarasam.com

**ஜன்யராகம்**

ஜனக ராகத்தினின்றும் உண்டாகும் ராகத்திற்கு ஜன்ய ராகம் என்று பெயர். ஜன்ய ராகமென்றால் பிறந்த ராகம் என்று பொருள். ஜன்ய ராகங்கள் அநேக வகைப்படும். அவை வர்ஜ ராகம், வக்ர ராகம், உபாங்க ராகம், பாஷாங்க ராகம் முதலியன. ஒவ்வொரு ஜனக ராகத்திற்கும் அநேக ஜன்ய ராகங்களிருக்கின்றன. ஒவ்வொரு ஜன்ய ராகத்தின் ஸ்வரங்களும் அதன் ஜனக ராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே இருக்கும். (உ-ம்) மோஹனம்.

## ஜன்ய ராகத்தின் பிரிவுகள்

**வர்ஜ ராகங்கள்:-**

ஜன்ய ராகத்தின் ஆரோகணத்திலோ அல்லது அவரோகணத்திலோ அல்லது ஆரோகண அவரோகண மிரண்டிலுமோ, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோ ஸ்வரங்கள் இல்லாமலிருந்தால் அந்த ராகம் வர்ஜ ராகம் என்று அழைக்கப்படும். உதாரணமாக மோகன ராகத்தில் (ஆ:- ஸரிகபதஸ், அ:-ஸ்தபகரிஸ) மத்யமும் நிஷாதமும் இல்லை. ஆகவே இது ஒரு வர்ஜ ராகம். சப்த ஸ்வரங்களையுமுடைய ஆரோகண, அவரோகணங்களுக்கு சம்பூர்ணம் என்றும், ஒரு ஸ்வரம் வர்ஜமாயிருக்கும் அதாவது ஆறு ஸ்வரங்களையுடைய ஆரோகண அவரோகணங்களுக்கு ஷாடவம் என்றும், இரண்டு ஸ்வரங்கள் வர்ஜமாயிருக்கும் அதாவது ஐந்து ஸ்வரங்களையுடைய ஆரோகண அவரோகணங்களுக்கு ஔடவம் என்று பெயர்.

சம்பூர்ண, ஷாடவ, ஔடவ பேதங்களினால் எட்டு வகையான வர்ஜ ராகங்கள் உண்டாகின்றன. அவையாவன:-

| பிரிவுகள் | | | உதாரணங்கள் | |
|---|---|---|---|---|
| ஆரோகணம் | அவரோகணம் | இராகத்தின் பெயர் | ஆரோகணம் அவரோகணம். | ஜனக ராகத்தின் இலக்கமும் பெயரும் |
| 1. ஷாடவ | ஸம்பூர்ணம் | காம்போதி | ஸரிகமபதஸ் ஸ்நிதபமகரிஸ | 28வது ஹரிகாம்போதி |
| 2. ஔடவ | ஸம்பூர்ணம் | ஆரபி | ஸரிமபதஸ் ஸ்நிதபமகரிஸ | 29வது தீரசங்கராபரணம் |
| 3. ஸம்பூர்ண | ஷாடவம் | பைரவம் | ஸரிகமபதநிஸ் ஸ்தாபமகரிஸ | 17வது ஸூர்யகாந்தம் |
| 4. ஸம்பூர்ண | ஔடவம் | ஸாருமதி | ஸரிகமபதநிஸ் ஸ்நிதமகஸ | 20 வது நடபைரவி |
| 5. ஷாடவ | ஷாடவம் | மலயமாருதம் | ஸரிகபதநிஸ் ஸ்நிதபகரிஸ | 16வது சக்கரவாகம் |
| 6. ஷாடவ | ஔடவம் | நாட்டைக்குறிஞ்சி | ஸரிகமதநிஸ் ஸ்நிதமகஸ | 28வது ஹரிகாம்போதி |
| 7. ஔடவ | ஷாடவம் | மலஹரி | ஸரிமபதஸ் ஸ்தபமகரிஸ | 15வது மாயமாளவகௌளை |
| 8. ஔடவ | ஔடவம் | மோகனம் | ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ | 28வது ஹரிகாம்போதி |



RangaRakes Tamilnavarasam.com

**வக்ரராகம்:-**

ஒரு ஜன்ய ராகத்தின் ஆரோகண அவரோகணங்களில் ஸ்வரங்களின் வரிசை கிரமமாக இல்லாமல் மேலும் கீழும் செல்லுமானால் அந்த ராகம் வக்ர ராகம் எனப்படும்.

(உ-ம்) கமாஸ் ஆ: -ஸமகமபதநிஸ்

அ:- ஸ்நிதபமகரிஸ

**உபாங்க ராகம்:-**

தாய் ராகத்திற்கு உரியதான ஸ்வர வகைகளை மட்டும் எடுத்துக்கொள்ளும் ஜன்ய ராகத்திற்கு உபாங்க ராகம் என்று பெயர்.

(உ-ம்) மோகனம், மத்தியமாவதி.

**பாஷாங்க ராகம்:-**

தாய் ராகத்தைச் சேர்ந்த ஸ்வர வகைகளைத் தவிர ஒன்றிரண்டு அன்னிய ஸ்வரங்களையும் எடுத்துக் கொள்ளும் ஜன்ய ராகத்திற்கு பாஷாங்க ராகமென்று பெயர். உ-ம்: காம்போதி, கமாஸ், ராகங்களில் காகலி நிஷாதம் அன்னிய ஸ்வரமாக தோன்றுகிறது. இந்த அன்னிய ஸ்வரம் குறிப்பிட்ட சில சஞ்சாரங்களில் மட்டுமே தோன்றும்.

## நிஷாதாந்திய, தைவதாந்திய பஞ்சமாந்திய பிரிவுகள்.

சில ராகங்களின் சஞ்சாரங்கள் தாரஸ்தாயி ஷட்ஜத்தை எட்டாமல் அதற்குக் கீழேயே நின்று விடுகின்றன. அப்படிப்பட்ட இராகங்கள் மூன்று வகைப்படும்.

**நிஷாதாந்தியராகம்:-**

மத்திய ஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் ஸஞ்சாரம் இல்லாத ராகம் நிஷாதாந்திய ராகம் எனப்படும்.

(உ-ம்) நாதநாமக்கிரியை ஆ:-ஸரிகமபதநி
அ:-நிதபமகரிஸநி } 15 ன் ஜன்யம்

**தைவதாந்திய ராகம்:-**

மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் ஸ்ஞ்சாரம் இல்லாத ராகம் தைவதாந்திய ராகம் எனப்படும்.

(உ-ம்) குறிஞ்சி ஆ:-ஸநிஸரிகமபத
ஆ:-தபமகரிஸநிஸ } 29ன் ஜன்யம்

**பஞ்சமாந்திய ராகம்:-**

மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் ஸ்ஞ்சாரம் இல்லாத ராகம் பஞ்சமாந்திய ராகம் எனப்படும்.

(உ-ம்) நவரோஜ் ஆ:-பதநிஸரிகமப
அ:-மகரிஸநிதப } 29ன் ஜன்யம்



RangaRakes Tamilnavarasam.com

# இசைக்கருவி

## தம்புரா




தம்புரா சுருதி வாத்தியங்களில் மிகவும் சிறப்பானது. இசைக்கருவிகளின் பிரிவுகளில் நரம்புக்கருவி என்னும் பிரிவைச் சேர்ந்தது. இக்கருவியைத் தம்புரா, தம்பூர், தம்புரி, தம்புரு, தம்பூரி என ஐந்து விதங்களாக அழைப்பர். தம்புரா என்னும் பெயர் தும்புரு கையாண்ட வாத்தியம் என்ற காரணத்தினால் வந்திருக்கலாம். தும்பு என்றால் சுரைக்காய்க்கு இன்னுமொரு பெயர். சுரைக்காயைக் கொண்டு செய்யப்பட்டதினாலும் தம்புரா வந்திருக்கலாம்.

**தம்புராவின் பாகங்கள்**

1. குடம்
2. தண்டி
3. கழுத்து
4. பிருடைகள் (Pegs)
5. குதிரை (Bridge)
6. மீட்டும் தந்திகள்
6. A பஞ்சமத்தந்தி – ப
6. B சாரணித்தந்தி – ஸ
6. C அனுசாரணித்தந்தி – ஸ
6. D மந்தரத்தந்தி – ஸ
7. மணிக்காய்கள்
8. தந்தி தாங்கி
9. நாபுக்கள் (சிறுதுளைகள்)



RangaRakes Tamilnavarasam.com

நன்றாக சுருதி சேர்ந்துள்ள தம்புராவில் அந்தரகாந்தாரம், சதுஸ்ருதி ரிஷபம் ஒலிப்பதைக் கேட்கலாம். நன்றாக சுருதி சேர்ந்த தம்புராவை கச்சேரியின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் மீட்டினால் மேளக்கட்டு ஏற்படும்.

தம்புரா பலா மரத்தினால் செய்யப்படுகின்றது. இந்த வாத்தியம் குடம், தண்டி, கழுத்து, நான்கு பிருடைகள், ஒரு குதிரை (Bridge) நான்கு தந்திகள் முதலியவைகளுடன் கூடியது. குடமானது அரைவட்ட வடிவமாக விளங்குகிறது. குடத்தின் மேல்பாகம் ஒரு மெல்லிய பலகையினால் மூடப்பட்டுள்ளது. அப்பலகையின் மேல் பாகத்தில் மரத்தினாலான குதிரை நடு மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தம்புராவில் குடத்தின் முனையில் நான்கு தந்திகள் கட்டப்பட்டு இவை குடத்தின் நடுவில் இருக்கும் குதிரையின் வழியாக குடத்தின் மேல்பாகத்திலும் தண்டியின் மேல்பாகத்திலும் தொடர்ந்து சென்று கழுத்துப் பாகத்தில் பக்கத்திற்கு இரண்டாக அமைக்கபட்பட்டிருக்கும் நான்கு பிருடைகளில் தனித்தனியே கட்டப்பட்டுள்ளன.

தந்திகள் சுருதி கூட்டப்படும் முறை பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| பஞ்சமம் | – | மந்தரஸ்தாயி பஞ்சமம் | ப |
| ஸாரணி | – | மத்தியஸ்தாயி ஷட்ஜம் | ஸ |
| அனுஸாரணி | – | மத்தியஸ்தாயி ஷட்ஜம் | ஸ |
| மந்தரம் | – | மந்தரஸ்தாயி ஷட்ஜம் | ஸ |

தம்புராவை ஆள்காட்டி விரலால் மீட்டி வாசித்தல் வேண்டும். ஸாரணி, அனுஸாரணி இரண்டும் ஒரே சுருதியில் இருப்பதனால் இவற்றினின்று பரிவு சப்த அசைவுகள் உண்டாகி நாதத்தின் தன்மையை சிறப்படையச் செய்கிறது. மந்தர ஷட்ஜத்திற்கு சுருதி செய்யப்பட்ட நான்காம் தந்தியினின்றும் ஸ்வயம்பு ஸ்வரங்கள் உண்டாவதைக் கேட்கலாம். சுருதி செம்மையாகக் கூட்டப்படுவதற்காகக் குடத்தின் மேல் குதிரைக்கும் தந்தி தாங்கிக்கும் நடுவில் நான்கு மணிக்காய்கள் உள்ளன. இவற்றைத் தந்தி தாங்கியின் பக்கமாகத் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். எதிர்ப்புறம் தள்ளினால் சுருதி குறையும். நாதம் கணீரென்று ஒலிப்பதற்காக ஜீவாளி என்று சொல்லப்படும் பட்டுநூல் அல்லது கம்பளி நூல் போன்றவைகளை குதிரைக்கும் தந்திக்கும் மத்தியில் வைக்கப்படும். இந்த ஜீவாளி குறிப்பிட்ட ஸ்தானத்திலிருந்தால்த் தான் நாதம் பளிச்சென்று கேட்கும். தம்புராவிற்குரிய நாதத்தைக் கொடுப்பதே ஜீவாளி ஆகும்.

தம்புராவை நிறுத்தி வைத்துக் கொண்டும் படுக்க வைத்துக் கொண்டும் மீட்டுவர். மைசூர், மிராஜ், திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலும் தம்புராக்கள் செய்யப்படுகின்றன.

# இராகலக்ஷணம்

## மாயாமாளவகௌளை

15வது மேளகர்த்தா ராகம். அக்னி சக்கரத்தில் மூன்றாவது மேளராகம். இந்த ராகத்தின் பழைய பெயர் மாளவகௌளமே. கடபயாதி ஸங்க்யைக்காக மாயாமாளவகௌளை என அழைக்கபட்டது.

ஆ:– ஸரிகமபதநிஸ்

அ:– ஸ்நிதபமகரிஸ



RangaRakes Tamilnavarasam.com

ஸட்ஜ, பஞ்சமங்களத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள்:– சுத்த ரிஷபம், அந்தரகாந்தாரம் சுத்த மத்யமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

ஷம்பூர்ண ராகம். ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம். க, நி ஜீவ ஸ்வரங்கள். காந்தார பஞ்சமங்களில் நின்று ஸஞ்சாரம் செய்யலாம். எப்பொழுதும் பாடத்தகுந்தது. புராதன ராகங்களிலொன்று பல ஜன்ய ராகங்களுடைய மேள ராகங்களில் இதுவும் ஒன்று. தோஷமற்ற ராகம். பூர்வாங்கமும், உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள ராகத்தில் இதுவும் ஒன்று. உருப்படிகள் பெரும்பாலும் ஸட்ஜ, காந்தார, தைவத, நிஷாத ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன. பக்தி ரஸமும், கருணாரஸமும் இந்த ராகத்திற்கு உகந்த ரஸங்களாகும். த்ரிஸ்தாயி ராகம்.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பைரவ தாட் என்னும் மேளத்திற்கு ஒப்பான ராகம் மாயாமாளவகௌளையாகும். இரண்டு பெயர்களையுடைய ஸ்வர ஸ்தானங்கள் இந்த ராகத்தில் வராததினாலும், ஜண்டை ஸ்வர பிரயோகங்களும், துரிதகால, சௌககால ஸஞ்சாரங்களும், பலவித தாடு பிரயோகங்களும் இந்த ராகத்திற்குப் பொருத்தமாக வரக்கூடியதினாலும், இந்த ராகத்திலேயே மாணவர்கள் ஸரளி வரிசைகளை முதன் முதலில் பயில வேண்டும் என்ற சம்பிரதாயம் ஏற்பட்டது.

இதன் பிரதி மத்திம இராகமே பந்துவராளி இராகம். மூர்ச்சனாகாரக மேளராகம்.

**ஸஞ்சாரம்:-** ஸரிகமபதநிஸ்– கமபதநிஸ்ரிஸ்ா– ஸ்நிதபதநிஸ்ா– ஸ்நிதநிஸ்ரிக்ரிக்ா– ம்க்ரிஸ்ா– ஸநிதபாமகா– கமபதநிஸ் ரிஸ்நி– தபாமகா– கமபதபம– கமகரிஸா ஸநிதநிஸரிஸா.

### உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| க்ருதி | மேருஸமான | மத்யாதி | தியாகராஜஸ்வாமி |
| | ஸ்ரீ நாதாதி | ஆதி | தீக்ஷதர் |
| | தேவாதிதேவ | ரூபகம் | மைஸூர் ஸதாசிவராயர் |
| கீர்த்தனை | ஆடிக்கொண்டார் | ஆதி | முத்துத்தாண்டவர். |

❖❖❖

### சங்கராபரணம்

29வது மேளகர்த்தா ராகம். பாண சக்கரத்தில் ஐந்தாவது ராகம். கடபயாதி ஸங்க்யைக்காக தீரசங்கராபரணமென்று அழைக்கப்பட்டது.

ஆ:–ஸரிகமபதநிஸ்
அ:–ஸ்நிதபமகரிஸ

ஸட்ஜ, பஞ்சமத்தை தவிர இந்த இராகத்தில் வரும் ஸ்வரங்கள்: சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்யமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்.

ஸம்பூர்ணராகம். ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி ராகம். எல்லா ஸ்வரங்களும் ராகச்சாயா ஸ்வரங்கள். ஸஸ ரிரி கக மம பப போன்ற ஜண்டை ஸ்வர பிரயோகங்களும் ரிநிஸ்த நிப தம பக மரி கஸ போன்ற தாடு ஸ்வர பிரயோகங்களும் ராக ரஞ்சகமானவை. ஸ்நிபா என்பது ஒரு அபூர்வமான விசேஷ பிரயோகம். விஸ்தாரமான ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் ராகம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள்



RangaRakes Tamilnavarasam.com

பாடுவதற்கேற்ற ராகம், எப்பொழுதும் பாடலாம். பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள மேள ராகங்களில் இதுவும் ஒன்று. உருப்படிகள் பெரும்பாலும் ஸ, ரி, ம, ப, ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

வடதேசத்தில் காணப்படும் 'பிலாவல் என்னும் ராகம் இதுவே. மேல் நாட்டார் ஸங்கீதத்தில் "மேஜர் ஸ்கேல்" என்று வழங்கப்படும் ராகமும் இதுவேயாகும். தேவாரத்தில் வரும் பண் பழம்பஞ்சுரம் என்பது இந்த இராகமேயாகும்.

**ஸ்ஞ்சாரம்**

ஸாபா பமகமா– கமபதாநிஸா – ஸநிஸத நிபதாநிஸா– ஸாஸநி ஸஸரிஸநீ– ஸரிகா – ஸரிகமகா– மகரிஸாநீ–ஸரிகமபா– மகரீஸாநி–ஸகரீரிஸாநி– ஸநிஸதநிபதாநிஸா கமபதநிஸரிஸாநிதபா ஸதாபா– மகரீகமபா– ஸரீகமபா– பாதநிஸரீகமபா– மகரீஸா நிஸதாநிஸா.

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| **தானவர்ணம்** | ஸாமிநின்னே | ஆதி | வீணைகுப்பய்யர் |
| | சலமேல | அட | ஸ்வாதி திருநாள் மகாராஜா |
| கிருதி | எந்துகுபெத்தவ | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| | ஸ்வரராகஸுதா | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| திவ்யநாமகீர்த்தனை | பாஹிராமசந்த்ர | ஆதி | தியாகராஜஸ்வாமி |

❖❖❖

## மோகனம்

ஜன்யராகம் 28வது மேளமாகிய ஹரிகாம்போஜியின் ஜன்யம்.

ஆ:– ஸரிகபதஸ்

அ:– ஸ்தபகரிஸ

ஷட்ஜ, பஞ்சமத்தை தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள்:– சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம். சதுஸ்ருதி தைவதம்.

வர்ஜராகம். ம , நி வர்ஜம் , ஔடவ ராகம். உபாங்கராகம். ரி , க , த ரகாச்[redacted] ஸ்வரங்கள். கக பப தத ஸ்ஸ் போன்ற ஜண்டை ஸ்வர பிரயோகங்களும், தக்ரிஸ்தப/ தரிஸ்தப/ கதபகரி/ ரிபகரிஸ/ போன்ற தாடு ஸ்வர பிரயோகங்களும் ராக ரஞ்சகமானவை. ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம். க, ப ஸ்வரங்களில் நின்று ஸ்ஞ்சாரம் செய்யலாம். த்ரிஸ்தாயி ராகம். புராதன ராகம். சுபகரமான ராகம். வர்ணனைக் கேற்ற ராகம். கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாடுவதற்குத் தகுதியான ராகம். எப்பொழுதும் பாடலாம், எனினும் இரவில் பாட மிக்க ரஞ்சகமாக இருக்கும்.

எல்லா உருப்படி வகைகளையும் இந்த ராகத்திற் காணலாம். ச்லோகங்களும் பத்யங்களும் விருத்தங்களும் பாடுவதற்கேற்ற ராகம், விஸ்தாரமான ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் ராகம். இசை நாடகங்களிலும், நிருத்திய நாடகங்களிலும் காணப்படும் பிரசித்த ராகங்களில் இதுவும் ஒன்று. உருப்படிகள் ஸ,க, த ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.



RangaRakes Tamilnavarasam.com

பிறநாட்டு ஸங்கீதங்களில் காணப்படும் ராகங்களில் இது வொன்று. மாணிக்கவாசகரின் திருவாசகம் தொன்று தொட்டு மோஹனராகத்திலேயே பாடப்பட்டு வருகிறது. முல்லைப்பண் என்பது மோஹன ராகமே. மோஹன ராகத்திற்கு முன் காலத்தில் ரேகுப்தி என்னும் பெயர் வழங்கி வந்தது.

**ஸஞ்சாரம்:-** கபத ஸ்ரஸ் பதஸ்ரிக்ரக்ரி– ஸ்ரி க்ப்க்ரக்ரி – ஸ்ரிக்ரீஸ்– தஸ்ரிஸ்தாதப– பகபதஸ்ரிஸ்தாப – கபகதாபகரி–ஸரிகபகாகரி– ஸரிகரிஸ – தஸரிஸ த த ஸ தா ப – ப க ப த ஸ த ஸா

## உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| கீதம் | வரவீணா | ரூபகம் | – |
| ஸ்வரஜதி | ஸாமிதயமீரா | ஆதி | – |
| தானவர்ணம் | நின்னுகோரி | ஆதி | ராமநாதபுரம் ஸ்ரீனிவாஸய்யங்கர் |
| கிருதி | பவனுத | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| கிருதி | நனுபாலிம்ப | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| கிருதி | மோஹனராம | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| கிருதி | ராமநின்னுநம்மின | சாபு | தியாகராஜஸ்வாமி |
| கீர்த்தனை | ஏன்பள்ளி | ஆதி | அருணாசலக்கவிராயர் |
| கீர்த்தனை | அருமருந்தொரு | ரூபகம் | முத்துத்தாண்டவர். |

## செயன்முறைப் பாடல்கள்
## ஆண்டு 6

**சிறுவர் பாடல்** — **குருவி ஒன்று மரத்திலே**

இராகம்: குந்தலவராளி — ஆ:– ஸ ம ப த நி த ஸ்

தாளம்: சதுஸ்ர ஏகம் (திஸ்ரநடை) — அ:– ஸ் நி த ப ம ஸ

இயற்றியவர்: அழவள்ளியப்பா.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸ ஸ ஸ | மா ம | ப ப நி | தா, |
| | கு ரு வி | ஒன் று | ம ரத் தி | லே |
| | ஸ்ா நி | தா ப | தா ப | மா, |
| | கூ டு | ஒன் றைக் | கட் டி | யே |



RangaRakes Tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| ம நி த | ஸ்ா ஸ் | நீ த | ஸ்ா, |
| **அ ரு மைக்** | **குஞ் சு** | **மூன் றை** | **யும்** |
| ஸ் ஸ் நி | தா ப | தா ப | மா, |
| **அ தில் வ** | **ளர்த் து** | **வந் த** | **து** |

2. நித்தம் நித்தம் குருவியும்
நீண்ட தூரம் சென்றிடும்
கொத்தி வந்து இரைதனை
குஞ்சு தின்னக் கொடுத்திடும்

3. இறைவன் தந்த இறகினால்
எழுந்து பறக்கப் பழகுவீர்
இரையைத் தேடித் தின்னலாம்
என்று குருவி சொன்னது.

4. நன்று நன்று நாங்களும்
இன்றே பறக்கப் பழகுவோம்
என்று கூறித் தாயுடன்
இரண்டு குஞ்சு கிளம்பின

5. ஒன்று மட்டும் சோம்பலாய்
ஒடுக்கிக் கொண்டு உடலையே
அன்று கூட்டில் இருந்தது
ஆபத் தொன்று வந்தது

6. எங்கி ருந்தோ வந்தனன்
ஏறி ஒருவன் மரத்திலே
அங்கி ருந்த கூட்டினை
அடைய நெருங்கிச் சென்றனன்

7. சிறகி ருந்தும் பறக்கவே
தெரிந்தி டாமல் விழித்திடும்
குருவிக் குஞ்சைப் பிடித்தனன்
கொண்டு வீடு சென்றனன்

8. குருவிக் குஞ்சு அவனது
கூட்டில் வாழலானது
அருமை அன்னை உரைத்தது
அதனில் காதில் ஒலித்தது.



RangaRakes Tamilnavarasam.com

## சிறுவர் பாடல்

### இலக்கியப் பாடல்

**மீனினம் ஓடிப்பரக்குதம்மா**

இராகம்:- மோகனம் தாளம்:-ஏகம்

ஆ) ஸரிகபதஸ் } 28வது மேளகர்த்தா திஸ்ர நடை

அ) ஸ்தபகரிஸ

இயற்றியவர்:- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| ஸ் ஸ் ஸ் | த ப ப் | ப த ப | க க ரி |
| **மீ னி னம்** | **ஓ டிப் ப** | **ரக் கு தம்** | **மா உள டே** |
| க ப த | ஸ் ப த | ஸ் ஸ் ஸ் | ஸ்ா, |
| **வெள் ளி ஓ** | **டம் ஒன் று** | **செ ல்லு தம்** | **மா** |
| க க க | க ரி க | ப ப ப | ப க ப |
| **வா னுங் க** | **ட லா க** | **மா று தம்** | **மா இந் த** |
| த த த | ஸ் ரி க் | 'ரி ஸ் ஸ் | ஸ்ா, |
| **மாட் சி யி** | **லுள்ளம்மு** | **ழு கு தம்** | **மா** |

2. அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா- அயல்
ஆம்பலுங் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பிதம்மா- மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ- அம்மா

3. சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா-பின்னர்
செம்பொற் குடம்போலத் தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா-ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

4. வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா- உடன்
வட்டந்திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா- கண்ணில்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.



RangaRakes Tamilnavarasam.com

## சிறுவர் பாடல்

### முரசுப் பாடல்

### " ஊருக்கு நல்லது சொல்வேன்"

இயற்றியவர்:- சுப்ரமணிய பாரதியார்

| | | | |
|---|---|---|---|
| க ம பா மா | கம கா ரீ | ஸா ஸா ; | ; ஸ்ா நீ |
| **ஊ . ருக் கு** | **நல் ல து** | **சொல் வேன்** | **எ னக்** |
| ஸா மா மா | மா மா மா | கம கா ரீ | ஸரி கா; |
| **உ ண் மை தெ** | **ரிந் த து** | **சொல் வே ன்** | **சொல் வேன்** |
| கம பக மா | கம கா ரீ | ஸா ஸா; | ; பா பா |
| **சீ. ருக் கெல்** | **லாம் மு த** | **லா கும்** | **ஒ ரு** |
| பத நீ தா | ப த பா மா | க ம கா ரீ | ஸ ரி கா |
| **தெய்வம் வந் து** | **துணை செய் ய** | **வேண் டும் .** | **வே ண் டும்.** |

2. சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

3. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்– புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.

4. தெய்வம் பலபல சொல்லிப்– பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வதனைத்திலும் ஒன்றாய்–எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்

5. யாரும் பணிந்திடும் தெய்வம்– பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.



RangaRakes Tamilnavarasam.com

6. அன்பென்று கொட்டு முரசே – மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்–இங்கு
யாவரும் ஒன்றெனக் கொண்டால்.

## நாட்டார் பாடல்

### முடியோடு தேங்காயை..

இராகம்:– நாதநாமக்கிரியை தாளம்:– ஏகம் (கண்டநடை)

| | | | |
|---|---|---|---|
| ஸா ரி ஸ நி | ஸா ரி ஸ நி | ஸா ரி ஸ நி | ஸ ரி மா, |
| **தெந் தெ னா .** | **தா னா . .** | **தெந் தெ னா** | **தா . னா** |
| கா ம க ரி | ஸா ஸ ஸ ரி | கா ம க ரி | ஸா ஸா, |
| **தெந் தெ னா .** | **தா . னா தெ** | **னா தெ ந் தி** | **னா னா** |
| ஸஸ ரி ஸ நி | ஸஸரி ஸ நி | ஸ ஸ ரிஸ நி | ஸரி மா , |
| **முடி யோ . டு** | **தேங்கா. யைக்** | **கை . யில் எ** | **டுத் தோம்** |
| கா ம க ரி | ஸ ஸ ஸ ஸரி | கா ம க ரி | ஸா ஸா, |
| தி திஜா | லிவி தாளன | தீன பந்து | மா மவ |
| ஸ்ரதலிபுத | சால ஸ்ரீ | பத்ம னாப | சௌரே. |



RangaRakes Tamilnavarasam.com

# மத்திம காலக் கீர்த்தனை—மயில்வாஹனா

இராகம்:-மோஹனம்
தாளம்:-ஆதி

ஆ- ஸரிகபதஸ்
அ:-ஸ்தபகரிஸ
இயற்றியவர்:- பாபநாசம் சிவன்

| 1₄ | 0 | 0 |
|---|---|---|
| | பல்லவி | |
| 1. த ஸ் தா ; பா பகதப கரிஸா | ரிகா ஸா, ரீ | கா ; பாதா |
| மயில் வா . ஹ னா.. வள்ளி | மன . மோஹ | னா . . மா |
| 2. ரி ஸ் தா ; பா தஸ்தப கரிஸரி | தபாக ரி ஸ ரீ | கா; ஸாரீ |
| மயில்வா . ஹ னா . வள்ளி | மன. மோஹ | னா.. சர |
| கா ரீ காபா காபா தாரீ | ஸ்ா ; ; ; | தா; கபதா |
| வ.ண ப.வ வ.ர மருள் | வாய் . . . | வா.. மா. |
| 3. ஸ்ரிஸ்த ஸ்தபத ரிஸ்தப கரிஸா | தபாக ரிஸரீ | பகா . ஸாரீ |
| மயில்வா .ஹ . னா.. வள்ளி | மன. மோஹ. | னா.. சர |
| காபக காபாதப பா தாஸ்த ஸரிக்ரி | ஸ்ாரிஸ் தாஸ்த பாதபகரி | ஸரிகபதஸ் ரீகரி |
| வ . . ணப . .வ வ ர ம.ருள் | வா . . ய் | வா . . மா |
| | அனுபல்லவி | |
| 1. பதாபா , தா ஸ்ஸ்ஸ்ா ஸா ரீ | க்ரீ ஸ்ா ஸ்ா ; | ; தா பாதா |
| கயி . லா . யம்மு. தல்மலை | களி லெல்லாம் | .. க. ளித்து |
| 2. தபாக ரிகபா தாஸ்ா ஸாரீ | க்ப்க் ரிஸ்ாஸ்ா | ரிஸ்தப தாஸ்ா |
| க.யிலா.யம் முதல் மலை | களிலெல்லா | ம்.க. ளித்து |
| ரிக்ாஸ்ா , ரி . பா தா ஸ்ா ரீ | க் ரிஸா தா | ரிஸ்தா பாதா |
| விளை. யாடும் பன்.னி. ரு. | கை..யா.மு | ரு.கை..யா |
| க் ரீ ஸ்ா , ரீ தாஸ்ா பாதா | க் ரீஸா, பத | ரிஸ்தப கரிகப |
| விளை . யாடும் பன்..னி.ரு | கை..யா.மு. | ரு..கை ..யா |
| | சரணம் | |
| 1. தா; ஸ்ாதா ; பாகா ; | தா; பாபா | கா ரீ ஸா; |
| பூ. ர்ணசந் . .தி.ரன். | போ.லும்அ | று.மு. கா.. |
| ஸாரீ காஸா ; ரீ கா பா | கா; பாதா | ரீஸா தா ; |
| பு.வ. னமொங் கும் நிறை | மா.ய.வன் | ம.ரு.கா |
| 2. பாதா ரிஸ்தா; பததபகா | பதரிஸ் தபகப | தபகரி ஸா; |
| பூ.. ர்ணசந் தி.ரன். | போலும் அ | று. மு. கா |
| ஸரி காபக கரிரிக பாதபபக பாதா | தபகா பாதா | பதரிஸ்தா; |
| புவ. .ன . மொங் ..கும் நிறை | மா. யவன் | ம.ரு.கா. |
| ;பதாப தா. ஸ்ா ரீ கா; | தாஸ்ாரீக்ா | ரீஸ்ா; ஸா ; |
| ஆ..ர ணப் பொரு. ளே | அ.டி.மைஎ | னையா. எ |
| ரிஸ்தா பதபதஸ்தஸ்ரி க்ா; | பதஸ்ரிக்ப்க்ரி | ஸ்ாரிஸ் தா ஸ்ா |
| ஆ... ர. ணப்பொருளே | அ.டி.மை.எ | னை.யா . . எ |
| 1. தா; ஸ்ா; பா; பாதா | பா கா; ரீ | ஸாரீ காபா |
| வா..வா.வா.ரா. . | ம.தாஸன் | ப.ணிகு.ஹா |
| 2. தஸ்ரிஸ் பதஸ்த கா; ஸரிகப | தாக்ரி ஸ்தபா | தபகரி கபதா |
| வா . . வா . . வா ரா . . | ம . தாஸன் | ப.ணி. கு.ஹா. (மயில்) |



RangaRakes Tamilnavarasam.com

# காவடிச் சிந்து – செந்தாழம்பூவும்

தாளம்- சதுஸ்ர ஏகம் (திஸ்ர நடை) இயற்றியவர்:– அண்ணாமலை ரெட்டியார்

1. ஸ க ரி க ம க ரி க ரி ஸஸா // ஸஸப ம கா ரிகரி ஸஸா //
செந்தா ழம்பூவுந் தேனுங் கமழ் திருக்க ழுக்குன் றா.ர னே.
; ஸ கா ம ம ப ப ப பா // ; ம பதநி ப த ப ப பா //
. வந்தாடும் கா.வ டியோர் . வ ணங்கும் பொற்சே. வடியோன்
ப த நி தபம மபத பமக // ம க ப ம க ரி ரி ம க ரி ஸ ஸ //
வரக்கன் தந்தையை குறக்கு ழந்தையை புரக்கும் கந்தவேள் சிறக்கும் சந்ததம்

2. கந்தா சிந்தா நந்தா செந்தூர் // கடம்பனே கட வு. ரனே //
; சிந்தாமணி .வி ளக் கே.. // திருப்புகழ் உந்தனுக்கே //
கும்பிடு போடுவோம் அன்புடன் நாடுவோம்// தெம்புடன் பாடுவோம் உன்னடி தேடுவோம்//

3. அன்றா. டம்பால் கும்பாபிஷேகம் அமரனே கும ரே. சனே
; கண்டா. மணியோசையும் ;கண்டேன் திருப்பணி பூசையும்
கந்தனே உந்தனைக் கண்டிட வேண்டியே நாடித் தொழுதோம்
நித்தமும் உந்தனை.

# காவடிச் சிந்து–சென்னிக்குளநகர்

இயற்றியவர்:– அண்ணாமலை ரெட்டியார்

| | | | |
|---|---|---|---|
| 1. ப ப ம | கமக | ரி ரி க | ஸஸ |
| சென்னிக்கு | ளநகர் | வாசன் | தமிழ் |
| ஸ ரி க் ரி | கமகரி | ரிரி | .ஸ ஸ |
| தே.றுமண் | ணாமலை | தாசன் | செப்பும் |
| ரி க மா ம ம | ரிகமாமம | ப த பா ம க | ரி க் ஸா ஸ ஸ |
| ஜெகமெச்சிய | மதுரக்கவி | அதனைப்புய | வரையில் புனை |
| ரி, கஸா | , ரிபமக | ஸாஸ | ; , |
| தீ-ரன் | - அ.யில். | வீரன் | - - |

2. வண்ணமயில் முருகேசன்-குற
வள்ளி பதம் பணி நேசன்-உரை
வரமே தரு கழுகாசல பதிகோயிலின் வளநான் மற
வாதே சொல்வண் மாதே



RangaRakes Tamilnavarasam.com

3. சந்நிதியில் துஜஸ்தம்பம்-விண்ணில்
தாவி வருகின்ற கும்பம்-எனுஞ்
சலராசியை வடிவார்பல கொடிசூடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்.

4. அருணகிரி நாவில் பழக்கம்-தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம்-பல
அடியார்கணம் மொழிபோதினிலமரா பதியிமையோர் செவி
அடைக்கும் அண்டம் உடைக்கும்

5. கருணை முருகனைப் போற்றி-தங்கக்
காவடி தோளின் மேல் ஏற்றி-கொழும்
அனலேறிய மெழுகாய் வரு பவரே வரும் இகமே கதி
காண்பார் இன்பம் பூண்பார்.

## தேவாரம்

### குற்றம் நீ

திருவாலவாய்
பண்:—கௌசிகம்
இராகம்:—பைரவி
தாளம்:—ரூபகம் அருளியவர்:—திருஞான சம்பந்தர்

| | | | |
|---|---|---|---|
| ; பாபாமா; பா | பமகாரீ ரிகஸா; | ;ரிகமா மகரிகஸா | மாபாதாபா;; |
| **குற்றம்நீ..கு** | **ணங்கள் நீ...** | **கூ . டலா ..ல** | **வா..யிலாய்..** |
| ; பாபாபா;தநி | ஸ்ா; நீதா பா; | ;ம மா ப ப ம கா ரீ | , பாதபமபா ; |
| **சுற்றம்நீ. பி** | **ரா. னும் நீ..** | **தொடர்ந்திலங்கு** | **.சோதிநீ . . . .** |
| ; பாதாபா;பா | தா, நீஸ்ா; ; | தா , நீஸ்ா ; ; | நிதாநிஸ்ா, ஸாநீ; |
| **கற்றநூற்க..** | **ருத்தும்நீ..** | **அருத்தமின்ப** | **மென்றிவை...** |
| ; தாநீஸ்ா;தா | நி, ஸரிஸநிதாபா | மபதநிஸ்ாநீதாபா | கா;மாபமகாரீ |
| **முற்றும். .நீ** | **பு.கழ்ந்து முன்** | **உரைப்.பதென்** | **மு.கம.னே.** |



RangaRakes Tamilnavarasam.com

# தேவாரம்

## பூத்தேர்ந்தாயன

திருவோத்தூர்
பண்:- **பழந்தக்கராகம்**
இராகம்:- **ஆரபி**
தாளம்:- **ஆதி**

அருளியவர்:-**திருஞான சம்பந்தர்**

| | | |
|---|---|---|
| ; தஸ்தா , பா , பாபா | ;, பா ப பா | மா, கரி ஸ ரீ |
| **பூத்தேர்ந் தா. யன** | **. . கொண்டுநின்** | **பொ. ன்னடி..** |
| ; தஸ்தா , பா, பா பா | மபதஸ்நி தபா | மா ; கரிஸரீ |
| **பூத்தேர்ந் தா.ய ன** | **கொண்டு நின்** | **பொன் ன..டி..** |
| ; ரிமா பதப மா , கரிஸ்ரீ | ; ரி மா பதஸ் | தா; மா பா |
| **ஏத்தா ... தா. ரில்லை** | **. என்னு. ங்** | **கா. ல். .** |
| ; பாதஸ் தபமாபாஸ் தஸ்ாஸ்ா | தஸ்ா தஸ்ா | ஸ்ா, நி த ப தா |
| **ஓத். . தூா..ர் மே . ய. . .** | **ஒளி மழு** | **வா. ளங்கை** |
| ; பாதஸ் தபமா பாஸ்த ஸ்ாஸ்ா | ; ஸ் 'ரீ ரி 'ரீ | ஸ் 'ரி ம் க்'ரி ஸ் ரீ |
| **ஒத். . துார் மே.. ய** | **ஒளிமழு** | **வா . ளங் கை** |
| ; த ரீ ஸ் ரீ ஸ்நிதா தாபா | ; ம பா பா , | மாகரிஸரீ |
| **கூத்தீ . ரும். ம..** | **குணாங்க** | **ளே....** |
| தரீஸ்ரீ ஸ்நிதா தா பா | மபதரிஸ்நிதப | தபமகரிஸரீ |
| **கூத்தீ. . . ரு ம். ம** | **கு . . ணாங் .** | **க. .. ளே** |

## திருப்புகழ்- காலனிடத்

**திருச்செங்கோடு**
இராகம்:-மோகனம்
தாளம்:-கண்டசாபு

அருளியவர்:- அருணகிரிநாதர்

தான தனத் தானதான தானத்தைத் தனதான

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலவகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே.



RangaRakes Tamilnavarasam.com

## திருப்புகழ்-பக்தியால்

### இரத்னகிரி

விராலிமலை
இராகம்:–நவரோஜ்
தாளம்:–ஆதி

அருளியவர்:– அருணகிரிநாதர்

தந்தனா தானனத் தனதான
தந்தனா. தானனத் தனதான

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாமா றெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## ஆண்டு 6

## கலாச்சாரப் பின்னணி

**சங்கீதக் கலையின் ஆரம்பம்:-**

சங்கீதம் ஒரு புனிதமான கலை. மனிதன் நாகரிகம் அடையும் முன்னரே இசை ஒரு தனிப்பாஷையாக விளங்கியது. மொழிமூலம் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்தில் அதாவது சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்தில் மனிதன் தனது உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத்தினான். பறவைகள், மிருகங்கள் வெளிப்படுத்திய ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக இருந்தன எனலாம். மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரவாரித்தும், துன்பத்தின் போது ஓலமிட்டும், பயத்தை வெளிப்படுத்த இரைந்தும் தன் வாழ்க்கையை நடத்தினான். பறவைகளின் இனிமையான ஒலி ஆனந்தம் தந்தது. இனிமையான ஓசையில் இருந்து பிறந்தவை எல்லாம் இசையாகின.

நாகரிகம் வளர வளர கலைகளும் வளர்ந்தன. வேத காலத்தில் இறைவனை வழிபாட்ட சாமகானம் எமது சுத்த இசைக்கு ஆரம்பம் எனக் கொள்ளலாம். சாமகானத்தில் நி, ஸ, ரி என்ற மூன்று ஸ்வரங்களும் இசைக்கப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டே ஏழு ஸ்வரங்களும் பிறந்தன. ஆதி காலத்தில் கீதம், வாத்தியம், நிருத்தியம் மூன்றும் சங்கீதம் எனக் கருதப்பட்டது. பின்னர் நிருத்தியம் தனியாக வளர்ச்சியடைந்தது. கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்தது சங்கீதம் எனக் கருதப்பட்டது. தற்போது இரு கலைகளும் பல்வேறு வகையில் மிகவும் விருத்தி அடைந்துள்ளன.



RangaRakes Tamilnavarasam.com

# கிராமியப் பாடலின் கலாச்சாரப் பின்னணி

ஏட்டில் எழுதாக் கவிகளாக செவி வழியாகப் பேணப்பட்டு வந்தவையே, நாட்டுப்பாடல்கள் ஆகும். அன்றாடம் வேலை செய்யும் மனிதன் தனது உடல் வருத்தம் தெரியாதபடி தான் செய்யும் தொழில் பற்றிப் பாடியதில் இருந்தே இப்பாடல்கள் தோன்றின எனலாம்.

தாய் தன் குழந்தையை நித்திரையாக்கப் பாடியது தாலாட்டு ஆகியது. குழந்தை பிறந்தவுடன் மருத்துவிச்சி குழந்தையை வாழ்த்திப் பாடியது மருத்துவிச்சிப் பாடலாகும். இதே போல் அரிவு வெட்டும் பாடல், ஏற்றப்பாடல், பொலிப்பாடல், ஓடப்பாடல், கப்பற்பாடல், விளையாட்டுப்பாடல் போன்றவை உருவாகின.

இது தவிர இறைவனை வணங்கும் போதும் சமயச் சடங்குகளின் போதும் பாடப்பட்ட பாடல்கள் பக்திப் பாடல்கள் ஆகின. கிராமத்தில் நன்றாகப் பாடக் கூடியவர்கள் பாடலைப் பாட, மற்றவர்கள் மெட்டைக் குழுவாக இசைப்பர். இவ்விதமாகக் கிராமியக் கலாச்சாரம் விளங்கியது.

இன்று இலங்கையின் பல பாகங்களிலும் அந்தந்தப் பிரதேச சூழலுக்கேற்ப பல்வேறு வகையான கிராமியப் பாடல்களைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. சமூகப் பண்பாட்டையும், சமுதாய ஒற்றுமையையும் பிரதிபலிப்பனவாக அவை அமைந்துள்ளன. கிராமியப் பாடல்களிலிருந்து ஒவ்வொரு பிரதேச மக்களுடைய வாழ்க்கை முறையையும், கலை கலாச்சாரத்தையும் நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

கிராமியப் பாடல்களில் அரிவு வெட்டுப்பாடலின் பின்னணி பற்றிக் கற்றுக் கொள்வோம். இலங்கையின் பிரதான உணவு நெல் அரிசிச் சோறு. எனவே எமது நாட்டின் முக்கிய தொழில் விவசாயம். எனவே வயலை உழுதல், வரம்புகட்டுதல், நெல்விதைத்தல், களைபிடுங்குதல், அரிவு வெட்டிய நெல்லைத் தூற்றுதல் போன்ற தொழிற்பாடுகள் விவசாயம் செய்யும்போது இடம் பெறுபவை. முற்காலத்தில் ஏர் பூட்டி மாடுகளைக் கொண்டு வயலை உழுதார்கள். மெய்வருத்தம், களைப்பு என்பன தோன்றாதவாறு ஆடிப்பாடி வேலை செய்தார்கள். ஒற்றுமையாகக் கூட்டமாக வாழ்ந்த சமுதாயத்தில் தோன்றிய இப்பாடல்கள் மண், வானம், மழை என்பனவற்றை வாழ்த்துவதாகவும், இலகுவான பேச்சுத் தமிழிலும் அமைந்திருந்தன.

"மண்ணை நம்பி உழுது
மழையை நம்பி விதைவிதைத்து"

இறைவனை நம்பி வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஆணும் பெண்ணுமாய் விளைந்த நெல்லை அறுவடை செய்து காய்ந்ததும் தூற்றி நெல்மணிகளை மகிழ்ச்சியுடன் வீடு கொண்டு செல்வார்கள். இச் சந்தர்ப்பத்தில் எழுந்தவையே அரிவுவெட்டுப்பாடல் ஆகும்.

ஆண்டு - 7

## ஆலயங்களும் இசையும்

இறைவனது நிருத்தமே இசை, நடனம், நாடகத்திற்கு முதற் கண்ணாய் உள்ளதென்பதைப் புராணங்கள் வலியுறுத்துகின்றன. இதிலிருந்து ஆலயங்களும் இசையும் ஒன்றோடொன்று தொடர்புடையன என்பது தெளிவாக விளங்குகிறது.



RangaRakes Tamilnavarasam.com

நாகரிகம் வளர்வதற்கு முற்பட்ட காலத்தில் பல்வகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பலவகை இசை நுட்பங்களை அறிந்திருந்தனர். கற்கோயில், மரக்கோயில்களின் முன்னிலையில் பரந்து வாழ்ந்த மக்கள் பலவகைப் பாடல்களைப் பாடியும், வாத்தியங்களை மீட்டியும் பரவச நிலையில் ஆடியும் தங்களது பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர்.

"தும்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க
தொம் தொம் என நந்தி மத்தளம் கொட்ட"

என்பதற்கு அமைய ஓவிய சிற்பங்களை ஆலயங்களில் நிறுவினர். இவை தவிர புராண வாயிலாக மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களைக் கோயில்களில் நடித்துக் காட்டுதற்கென்றே இசைக் கலைஞர்கள் இருந்தனர்.

இறைவனை வழிபடும்போது பல வகையான மங்கள ஒலிகளை எழுப்பி, சங்கு சேமக்கலம் கின்ரம் டாமரம் ஆகிய வாத்தியங்கள் ஒலிக்க நடன மாதர் நடனம் ஆட மங்களகரமாக வழிபட்டனர். நாதஸ்வரம், தவில் போன்ற மங்கள வாத்தியங்கள் மேலும் வழிபாட்டிற்கு மெருகூட்டின.

ஆலயங்களும் இசையும் பற்றி நினைத்துக் கொள்கையில் நாயன்மாருடைய பணி நினைவிற்கு வருகின்றது. ஆலயங்கள் தோன்றிய காலத்தில் இருந்தே யாழ்வாசிப்போர் மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார் ஆகியோர் இசையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். யாழ், நாதஸ்வரம், முரசு வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள், சுத்தமேளம், கொத்துமணி வாத்தியங்கள், சங்கு ஆகியவை ஆலயங்களில் கையாளப்பட்ட முக்கியமான சில வாத்தியங்களாகும்.

ஆலயங்களில் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி பாடப்படுகின்றது. ஆலய உற்சவ காலங்களில் நவசந்திப் பண் இசைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட விதிகளின்படி நவசந்திகளுக்கும் உரிய பண்களும் இராகங்களும் இசைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பஞ்சமுக வாத்தியம் ஆலய முரசு வகைகளில் மிகவும் பிரபல்யமானது. இறைவனது ஐந்து திருமுகங்களையும் உருவகித்து இவ் வாத்தியத்தை வகுத்துள்ளனர். பண்டைய காலத்தில் குருகுல முறைப்படி இசைக்கும் கல்விக்கும் வித்தியாரம்பம் செய்துவைத்து ஆலயங்களைப் பாடசாலையாகப் பயன்படுத்தினர். ஆலயங்களில் நுண்கலைகளை வளர்த்தனர்.

தேவார முதலிகள் காலத்தில் கூட்டுப் பிரார்த்தனை முறை இருந்தது என்பதை அறிகிறோம். ஞானசம்பந்தருடைய அடியார்களும், நாவுக்கரசரது அடியார்களும் தேவாரத் திருப்பதிகங்களைக் கூட்டுப் பிரார்த்தனையாகப் பாடும் வழக்கம் உடையவர்கள் எனப் புராணம் குறிப்பிடுகிறது. இன்றும் கூட்டுப் பிரார்த்தனை வழக்கம் உண்டு.

ஆலய பூஜை முடிந்ததும் பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது.

ஆலயங்களிலே புராண படலங்கள், கதாகாலட்சேபம், இசைக் கச்சேரிகள் முதலியன இன்றும் நடைபெறுவதைக் காணலாம். இசை மரபு தவறாத விற்பன்னர்களால் புராணங்களை ஜனரஞ்சமாக எடுத்துக்கூறும் மரபு தமிழ் நாட்டிலும் எமது நாட்டிலும் பிரபல்யமாகி, சமய அறிவையும் இசையறிவையும் மக்களுக்கு ஊட்டுவதில் ஆலயங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.



RangaRakes Tamilnavarasam.com

## வெவ்வேறு தொழிற்பாடல்களின் கலாச்சாரப் பின்னணி

கிராமியப் பாடல்களின் ஓர் அம்சமாக விளங்குகின்ற தொழிற்பாடல்கள், நம்முன்னோர் நமக்களித்த கலைச் செல்வங்கள், ஏட்டில் எழுதாத கவிதைகள். பாமர மக்களின் வாயால் உதிர்ந்த முத்துக்கள் எழுதாக் கவிகளாக கேள்வி மூலம் பெறப்பட்டு பரம்பரை பரம்பரையாக பாடப்பட்டு வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மக்கள் பல்வேறு வகையான தொழில்களைச் செய்யும்போதும் ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தனர். முக்கியமாக பலர் கூடிக் கூட்டாகத் தொழில் புரியும்போது "ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது" என்ற உண்மையை உணர்ந்தனர். ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வேலை செய்யும்போது உற்சாகம் கொள்வதும் இயல்பே. இத்தகைய சூழ்நிலைகளில் காதற் சுவையுள்ள பாடல்கள் தோன்றின.

உழைப்பாளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகப் பாடப்படுகின்ற இந்த இசையானது அவர்களின் உடற் சோர்வையும் உளச்சோர்வையும் போக்கித் தொழிலைத் திறமையாகச் செய்வதற்கு உதவிபுரிகின்றது. தொழிலாளர்கள் பாடலின் ஒத்திசைவுக்கு ஏற்ப தம் உடலை இயக்கி ஒருங்கிசைத்து வேலை செய்வதால் வினைத்திறமை மிகுகின்றது.

இலங்கையின் பல பாகங்களிலும் அந்தந்த பிரதேச சூழலுக்கேற்ற வகையில் வேறுபட்ட கிராமியப் பாடல்களை நாம் கேட்கக்கூடியதாக இருக்கிறது. சமூகத்தின் பிரதிபலிப்பை இப்பாடல்களின் மூலம் காணலாம். பிரதேசச் சூழல், சமயம், கலை, கலாச்சாரங்களையும் இப்பாடல்களின் மூலம் நாம் அறியக்கூடியதாக உள்ளது. ஏற்றம் இறைப்போர் பாடல், ஏர் பூட்டும்போது பாடும்பாடல், ஓடம் செலுத்துவோர் பாடும்பாடல், வலைபிழுப்போர் பாடும் பாடல், நெல்லுக்குத்தும் பெண்களின் பாடல், அரிவு வெட்டுப்பாடல் போன்றவற்றைக் கூறலாம்.

கலப்பையை நல்ல நாளிலே வெளியே எடுத்து வயலுக்குச் சென்று முதல் உழவு செய்யும் போது பூசைசெய்து பாடும் பாடல் ஏர் மங்கலம் என்று அழைக்கப்படுகிறது. வயல் செய்யும் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் வயல் உழுதல், நெல் விதைத்தல், களைபிடுங்குதல், அரிவு வெட்டுதல், நெல்தூற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களில் பல பாடல்களைப் பாடியுள்ளனர். காடுவெட்டி களனி செய்து கஷ்டப்பட்டு விதைவிதைத்துப் பெறப்பட்ட கதிர்மணிகளைச் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து மகிழ்ந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்ட பாடல்கள் அரிவு வெட்டுப்பாடல்கள் எனப்பட்டன.

இதேபோன்று மீன்பிடிக்கும் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் பாடும் பாடல்களில் கட்டுவலை எடுத்துக்கிட்டு புறப்பட்டு முப்பதுநாள் உழைத்து நிறைய பணம் வாங்கி அதை மூன்று நாளில் தின்றுவிட்டுக் கடனையும் வாங்கி பாக்கிநாளில் பெரும் பகுதி பட்டினியாகி மனப்பதறலோடு மாரடிக்கும் பாங்கினையும் காணக்கூடியதாக இருக்கிறது. தங்கள் தொழிலின் களைப்புத் தெரியாத வண்ணம் "ஏலேலோ ஐலசா" போன்ற சொற்களை உபயோகிக்கின்றனர். இச் சந்தச் சொற்கள் உடலில் முறுக்கேற்றி தொழில் செய்வதில் உற்சாகத்தைத் தூண்டுகின்றன.

இதைவிட மலையகத்தில் வாழுகின்ற மக்கள் கொழுந்துபறிக்கும்போதும் புல்லுவெட்டுகின்ற சந்தர்ப்பங்களிலும் தங்கள் தொழிலின் களைப்புத் தெரியாத வண்ணம் பல பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்களின் மூலம் அவர்களின் வாழ்க்கை முறையையும், தொழிலின் தன்மையையும் காணக்கூடியதாக இருக்கிறது.



RangaRakes Tamilnavarasam.com

ஆண்டு - 8

# இசையோடு இயைந்த வாழ்க்கைச் சம்பவங்களின் கலாச்சாரப் பின்னணி. (தாலாட்டு, ஒப்பாரி, கோத்தும்பி)

## தாலாட்டு.



**தாலாட்டு:-**

இயற்கையோடு ஒட்டிவாழும் உள்ளத்தினையும் பண்பினையும் உடைய நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும், செயல்களையும் வெளியிடும் பாடல்களே நாட்டுப்பாடல்கள், நாடோடிப் பாடல்கள், பாமரப்பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள் என்றெல்லாம் பலவகைப் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மக்கள் வாழ்க்கையில் உள்ள செய்திகளை, அவர்கள் இன்ப துன்பங்களை, விளையாட்டு வேடிக்கைகளை உள்ளபடியே எடுத்துக்காட்டுவன இத்தகைய நாட்டுப்பாடல்களாகும்.

நாட்டுப்பாடல்களில் குழந்தைகளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி, நிலாக்காட்டி மேலும் பல விளையாட்டுக்கள் காட்டித் தாய்மார் குழந்தையோடு குழந்தையாய்ப் பாடும் பாடல்கள் தாலாட்டுப் பாடல்களாகும்.

தாய்மார் தம் குழந்தைகளை அணைத்து நித்திரையாக்கும் பொருட்டு பரம்பரை பரம்பரையாகப் பாடிவரும் இன்னிசைப் பாடல்கள் தாலாட்டு என வழங்கப்படுகிறது. தாய் தன் குழந்தையை மடியிலோ, தோளிலோ, கைகளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவதே வழக்கம்.



RangaRakes Tamilnavarasam.com

"தால்" என்பது நாவைக் குறிக்கும். நாவை ஆட்டி இன்னோசை எழுப்பிக் குழந்தையை உறங்க வைத்தலே தாலாட்டாகும். "ஆராரோ,,, ஆரிவரோ" என்ற சந்தம் அமைப்பதனால் இது ஆராட்டுதல் என்றும் வழங்கப்படுகின்றது. தாலாட்டை தாராட்டு என்றும் ஓராட்டை ஓலாட்டு என்றும் சொல்லும் வழக்கம் உள்ளன. ஆராரோ ஆரிவரோ என்ற சந்தம் குழந்தையின் உடல் முயற்சிகளை ஒடுக்கிக் குழந்தைகளை உறங்கச் செய்யும் தன்மை வாய்ந்தது.

தாலாட்டுப் பாடல்கள் சாதிக்குச் சாதி, இடத்திற்கு இடம் வேறுபடினும் அவை எல்லாம் மென்மையான இனிமையையும் நெஞ்சுக்கு இதமான சுகத்தையும் அளிக்கின்றன. தாலாட்டின் தொடக்கத்திலும், இடையிலும், முடிவிலும் "ராராரோ ராரிரரோ", "ஆராரோ ஆரிரரோ" போன்றவை மெட்டுக்கள் என்னும் நிலையில் இசைக்கப்படுகின்றன. இந்த மெட்டுக்களுக்கேற்றவாறு பாடல்களும்

"பாட்டி அடித்தாளோ

பால் வார்க்கும் சங்காலே"

என்பது போன்ற நெடிலெழுத்துக்களுடன் அமைகின்றன. தாலாட்டுப் பாடல்களுக்கு இசை வல்லுனர்கள் நீலாம்பரி என்ற இன்பமூட்டும் இராகத்தை வகுத்துள்ளார்கள். இப்பாடல்கள் மென்மையான உணர்வை ஏற்படுத்தும் வகையில் விளம்ப காலத்தில் நீலாம்பரி, யதுகுலகாம்போஜி, சகானா, ஆனந்தபைரவி போன்ற இராகங்களிலும் இசைக்கப்படுகின்றன.

தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் அருமை, அதன் விளையாட்டுப் பொருட்கள், மாமன் பெருமை, குழந்தையின் குலப்பெருமை கூறப்படுகின்றன. தாய் தன் குழந்தையைத் தாலாட்டும் போது குழந்தையே அப்பாடலை முதலிற் கேட்கிறது. இரண்டாவதாக சில சமயங்களில் தாயின் அருகிலோ, அல்லது தாலாட்டுப் பாடல் காதில் விழக்கூடியதாக வீட்டின் வெளிப்புறத்தில் இருக்கும் குடும்பத்தினர், உறவினர் ஆகியோரும் பாடலைக் கேட்போராக அமையலாம். அத்தகைய சமயங்களில் தாயே அவர்களுக்குக் கூற வேண்டியவற்றைத் தாலாட்டுப் பாட்டில் அமைத்துப் பாடுவது வழக்கம்.

ஒரு தாய் குழந்தையின் இனிய முகத்தைக் கண்டு உள்ளம் உருகிப் பாடும் தாலாட்டுப் பாடல்களில் ஓசையும் பொருளும் ஒத்து இனிக்கும் அருமையான கவிதைகளைக் காண்கிறோம்.

## ஒப்பாரி

மக்கள் வாழ்க்கையில் இசை பின்னிப் பிணைந்துள்ளது. நாட்டுப் பாடல்களிலே மனதைக் கவரவல்ல உணர்ச்சி மிக்க பாடல்கள் ஒப்பாரியும், தாலாட்டுமாகும். இவை மங்கையர் குலத்திற்கே சொந்தமானவை. மனித வாழ்க்கையின் தொடக்கத்தில் பாடப்படுவது தாலாட்டு. வாழ்க்கையின் முடிவில் பாடப்படுவது ஒப்பாரி. ஒரு பெண்ணின் தாய், தந்தை, கணவன் மற்றும் உற்றார் உறவினர் எவரேனும் இறந்து விட்டால் அப்பொழுது அப் பெண்ணின் உள்ளத்தில் இருந்து எழுகின்ற துன்ப உணர்வே ஒப்பாரியாக வெளிப்படுகின்றது. இறந்து போன ஒருவருக்காகப் பாடப்படும் பாடல்களே ஒப்பாரிப் பாடல்களாகும்.

இறந்தவரின் வரலாறு பற்றித் தெரியாதவர்கள் அப்பாடல் மூலம் வரலாற்றினை அறியக்கூடியதாயிருக்கிறது. பெண்களாலேயே இவை பாடப்படுகின்றன. இப் பாடல்களிலே துன்ப உணர்ச்சியைத் தவிர வேறு எவ்வகை உணர்ச்சிகளையும் காணமுடியாது. மக்களின் துக்கமும் இங்கே ஒப்பாரியாகக் கலைவடிவம் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.



RangaRakes Tamilnavarasam.com



இப்பாடல் வகைகளின் இசை, விளம்பமும் மத்தியமும் கலந்ததொரு லய அமைப்பில் முகாரி, ஆகிரி முதலான இராகச் சாயலுடன் விளங்குகிறது.

உறும், உறும் எனத்தாள இசை தரும் உறுமிமேளம் நாட்டுப்புறங்களில் இழவு வீடுகளில் இசைக்கப்படும் ஒரு கருவியாகும். "இன்னைக்கி உறுமிச் சத்தம் கேட்டதென்ன" என்று புலம்பும் ஓர் ஒப்பாரிப் பாட்டில் இருந்து உறுமி சில வட்டாரங்களில் சாவுக்கான குறியீட்டு இசைக்கருவி ஆகியுள்ளது.

உதாரணமாக சில ஒப்பாரிப் பாடல்களின் சில பகுதிகள் தரப்பட்டுள்ளன.

## தாயாரின் ஒப்பாரி

பொன்னான மேனியிலே – ஒரு
பொல்லாத நோய் வந்ததென்ன
தங்கத் திருமேனியிலே–ஒரு
தகாத நோய் வந்ததென்ன



RangaRakes Tamilnavarasam.com

## கோத்தும்பீ



மாணிக்கவாசக ஸ்வாமிகளுடைய திருவாசகம் ஒரு ஞானநூல். அதில் மக்களுடைய வாழ்க்கையில் நடைமுறையில் இருந்த உலகியல் வழக்குகளை தன்னுடைய திருவாசகத்தில் பக்தி இலக்கியமாகப் பிரித்துள்ளார். இறைவனை நாயகனாகவும், ஆன்மாவை நாயகியாகவும் குருவை சகியாகவும் உருவகித்தும் பாடியுள்ளார். இறைவன் மேல் தீராத பக்தி கொண்ட நாயகி சோலையில் பறந்து திரியும் இராச வண்டிடம் நீ ரீங்காரம் செய்து பாடும் போது இறைவனுடைய தொன்மைக் கோலத்தை அவனுடைய "பொறாமைகளையே பாடு" என்று கூறுவது போல் பாடப்பட்ட பாடல் கோத்தும்பி ஆகும். கோத்தும்பி என்றால் வண்டுகட்கெல்லாம் அரசனான இராசவண்டைக் குறிக்கும். உதாரணம்:– தோலும் திகிலும்



RangaRakes Tamilnavarasam.com

# சமயச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் கிராமிய இசைக்கருவிகளின் கலாச்சாரப் பின்னணி

உலகம் போற்றும் நுண்கலைகள் எல்லாவற்றிலும் இசைக்கலையே தனிச்சிறப்பு பெற்ற ஒரு கலையாகும். இசையொலியின் பல நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும், சிறப்பாக மொழிகலவாத் தனியிசையின் மேன்மையை உணர்வதற்கும் இசைக்கருவிகள் பெரிதும் பயன்படுகின்றன.

சமயச்சடங்குகளில் உபயோகிக்கப்படும் கிராமிய இசைக்கருவிகள் பற்றி சிறிது எடுத்து நோக்கும் போது

அநேகமாக சமயச் சடங்குகளில் தாளவாத்தியங்களே உபயோகிக்கப்படுகின்றன.

**தவில்-** பெரிய மேளம் எனப்படும் நாதஸ்வர கோஷ்டியில் இசைக்கப்படும் தாளக் கருவி தவில் ஆகும். ஒரே பலாமரக்கட்டையில் நீள உருண்டை வட்ட வடிவத்தில் குடைந்தெடுக்கப்பட்டுள்ள இக்கருவியின் இருவாய்ப் பக்கங்களிலும் இரண்டு வட்டத்தோல்கள் மூடப்பட்டுள்ளன.



வலது பக்கத் தோல் வலது கை விரல்களினாலும், இடது பக்கத்தோல் ஒரு கெட்டியான மரக் குச்சியினாலும் அடித்து வாசிக்கப்படுகிறது.

**கஞ்சிரா-** பஜனைகளிலும், கிராமிய மக்களினாலும் உபயோகிக்கப்படும் எளிய தாளக் கருவி. கிராமியத்தில் பயன்படுத்தப்பட்ட இக்கருவியை தற்போதைய கஞ்சிரா உருவத்தில் செய்து கச்சேரிகளில் உபதாள வாத்தியமாக வாசித்துப் பெருமை பெற்றவர் திரு. மாமுண்டிப் பிள்ளையாவார்.





RangaRakes Tamilnavarasam.com

**நகாரா** - இது ஒரு கெட்டித் தோலால் மூடப்பட்ட அரைவட்ட வடிவத்தில் உள்ள ஆலய தாள இசைக் கருவியாகும். இதன் குடம் பித்தளை, இரும்புத்தகட்டால் செய்யப்பட்டிருக்கும். ஊர்வலம் வரும் போது இரண்டுசக்கர வண்டியில் ஊர்ந்து செல்லப்பட்டு வாசிக்கப்படும். இரண்டு வளைந்த மரக்குச்சிகளினால் தோல்பட்டையை அடித்து நாதத்தைக் கிளப்பலாம்.



**டமாரம்** - ஆலயத்தைச் சுற்றி உற்சவ மூர்த்திகளை நான்கு சித்திரைத் தெருக்களில் ஊர்வலம் எடுத்து வரும்போது ஒலிக்கப்படும் வாத்தியம் இதுவே.



ஊர்வலத்திற்கு முன்னால் இதை ஒரு காளைமாட்டின் முதுகில் தனித் தனியாக இருபக்கங்களிலும் தொங்கவிட்டு அடித்து வாசிப்பார்கள். மரத்தினால் செய்யப்பட்ட இத்தாள இசைக்கருவி, தோலினால் மூடப்பட்டு சுற்றிலும் வார்களினால் இழுத்துக் கட்டப்பட்ட ஒற்றை முகஜோடி வாத்தியமாகும்.

**உடுக்கை** – கிராமப்புறக் கோயில்களிலும், முக்கியமாக மாரியம்மன் கோயில்களிலும் சமயச்சடங்குகளிலும் வாசிக்கப்படும் ஒருதோல் வாத்தியமாகும். உலோகத்தால் செய்யப்பட்ட இரு பக்கங்களும் விரிந்து இடை சிறுத்து இருப்பதால் இதை இடைசுருங்குபறை என்றும் துடி என்றும் அழைப்பர்.



**தம்பட்டம்** – இது ஒரு கிராமிய தாள இசைக்கருவியாகும். இதன் ஒரு பக்கம் தோலால் மூடப்பட்டிருக்கும். இதை இடது கை தோளில் தொங்க விட்டு, இடது கை விரலில் சிறுகுச்சியாலும், வலது கையில் ஒரு நீளமான கழியாலும் அடித்து டண்டண் டண்ணக்கு என்று ஒலிக்கச் செய்வர் கிராம தேவதைகளின் திருவிழாக்களில், ஒருஇனத்தார் தம்பட்டத்தை இயக்குவதைக் காணலாம்





RangaRakes Tamilnavarasam.com

**பூஜாரிக் கைச்சிலம்பு** - இது நீண்டு வளைந்த வட்டவடிவமான ஒரு அங்குல குறுக்களவுள்ள பித்தளை அல்லது வெண்கலச் சுருளினுள் சில உலோகக் குண்டுகள் போடப்பட்டு இயங்கும் தாளக்கருவியாகும்.



கிராமங்களில் மாரியம்மன் கோயில்களில் பூஜாரிகள் கையிலேந்தி வழிபாட்டின் போது இசைப்பார்கள்.

**தாளம்** - தாளம் போடுவதற்கு உபயோகிக்கப் டுகிறது. சிறிய அளவில் வெண்கலத்தால் செய்யப்பட்டவை. தேவார, பஜனைகளில் இவை ஒலிக்கப்படுகின்றன. இது குழித்தாளம் எனவும் குழிமணி எனவும் பெயர் பெறும்.



**சேமக்கலம்**- பண்டாரங்களும், நாடோடிகளும் கையாளப்படும் இசைக் கருவியாகும். இது பூர்ண சந்திரன் வடிவத்தில் உள்ளதால், ஆலயங்களிலும் இதை வாசிப்பர். இதை ஒரு குச்சியினால் அடித்து வாசிப்பர்.



மார்கழி மாதத்தில் காலையில் தமிழ்ப்பாடல்கள் பாடி வாசித்துக் கொண்டு செல்வதைக் காணலாம்.

**நாதஸ்வரம்** - திறந்த வெளியில் பெரிய நாதத்துடன் இயங்கும் துளைக்கருவிகளுள் தலைசிறந்தது. இதனை தமிழ் மொழியில் நாயனம் என்பர்.

நாகஸ்வர கோஷ்டி பெரிய மேளம் என்று சொல்லப்படும். பெரிய மேளத்தில் நாகஸ்வரம் வாசிப்பவர், தாளம் போடுபவர் உண்டு. சடங்குகளை நடத்தும் போதும், உற்சவ காலங்களிலும், ஊர்வலங்களிலும், விவாகக் காலங்களிலும் பெரிய மேளத்தைக் கையாளுபவர் ஒருகுறிப்பிட்ட வகுப்பினராகிய இசைவேளாளர்களாவர். ஆனால் தற்காலத்தில் வேறு வகுப்பினராகிய பிராமணர்களும், கேரளாவில் சில இனத்தவரும் இவ்விசைக் கருவியை நன்கு அப்பியாசித்துப் பெயர் பெற்றுள்ளனர். உதாரணம் -





RangaRakes Tamilnavarasam.com

பழனி லட்சுமிநாராயண அய்யர் சகோதரர்கள், ஷேக் சின்ன மௌலானா, திருவிழா ஜெயசங்கர் குறிப்பிடத்தக்கவர்கள்



**திருச்சின்னம்** – இதுவும் ஒரு காற்று வாத்தியம். இது ஒரு ஜோடிக் குழாய்களால் ஆனது. ஆலய வழிபாட்டின் போது வாசிக்கப்படுகிறது.



**எக்காளம்**– இது 4 பித்தளை அல்லது தாமிரக் குழாய்கள் சேர்ந்து வாய் வைத்தூதும் துணையுடன் கூடிய இசைக் கருவி. ஆலய வழிபாட்டு ஊர்வலங்களில் இது இயங்கப்படுகிறது.

இன்றும் எமது நாட்டிலும் யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் ஸ்வாமி எழுந்தருளும் போது எக்காளம் வாசிக்கப்படும் வழக்கத்தைக் காணலாம்

சமயச் சடங்குகள் எனும் போது கண்ணகி, மாரியம்மன், பைரவர் போன்ற தெய்வ வழிபாடுகள் தொடர்பானவையாகும். உருவேற்றுப் பாடல்கள் இசைக்கப்படும் கிரியைகள் நடக்கும் போதும் மேற்கூறிய வாத்தியங்கள் மிகப் பெரிய ஓசை எழுப்பி வாசிக்கப்படுவதைக் காணலாம்.



RangaRakes Tamilnavarasam.com

# வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்களின் கலாச்சாரப் பின்னணி

## (கும்மி, கோலாட்டம், கொம்புமுறி. உஞ்சல்)

### கும்மி



கும்மியடித்தல் பெண்களுக்கே உரிய விளையாட்டு. வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதப்பாட்டு என்று பாரதியார் கும்மிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

பண்டிகை நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் கிராமியச் சூழலில் பெண்கள் கும்மியடித்துப் பாடுவதுவழக்கம். கிராமியக் கலைகளில் முக்கியமான ஓர் இடத்தை கும்மி வகிக்கின்றது.

குத்துவிளக்கு, கண்ணன்சிலை, பூக்கூடை போன்றவற்றில் ஒன்றை நடுவில் வைத்து அதைச்சுற்றி இளம் பெண்கள் வட்டமாகக் குனிந்தும் நிமிர்ந்தும் கையால் தாளம் கொட்டிப் பாடுவர்.

பெண்கள் இவ்விதம் விளையாடும் விளையாட்டை ஒட்டியே மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இறைவனைப் புகழ்ந்து பாடி ஆடுவதாக திருவம்மானை (ஆனந்தக்களிப்பு) பாடியுள்ளார். கும்மிப் பாடல்களில் ஒரு பெண் முறைவைத்துப் பாட மற்றவர் பின்பற்றிக் கூட்டாகப் பாடல் இசைப்பர்.

ஆடலும் பாடலும் எளிமையும் அழகும் வாய்ந்தனவாகவும் இருக்கும்

நாட்டார் இசையில் வழக்கிலிருந்து கும்மி மறைந்து போகாது அதற்குப் புத்துயிர் கொடுத்தவர்களுள் கோபாலகிருஷ்ண பாரதியாரும் ஒருவராவர். இவர் இயற்றிய சிதம்பரக் கும்மி இதற்குச்சான்று.

சுப்பிரமணியபாரதியாரின் பெண்கள் விடுதலைக் கும்மியும் குறிப்பிடத்தக்கதாகும்.



RangaRakes Tamilnavarasam.com

**கொம்புமுறி**

இதுவும் ஒரு கிராமிய விளையாட்டுப் பாடலாகும். இவ் விளையாட்டு மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள ஊர்களில் இன்றும் விளையாடப்படுகின்றது. ஊர் முழுவதும் வடசேரி, தென்சேரி என்றோ கீழைச்சேரி மேலைச்சேரி என்றோ இரு கட்சிகளாகப் பிரிந்து கொள்ளும். இந்த இருகட்சிகளுக் குள்ளும் போட்டி நடைபெறும்.

இப் போட்டியில் கொழுவி இழுக்கக்கூடிய வலிய மரக்கொம்புகள் ஒவ்வொன்றை இரு கட்சியாளரும் தெரிவுசெய்து கொள்வர்.

குறிப்பிட்ட தினத்தில் இரு கட்சியினரும் எதிர் எதிராக நின்று, தமது கொம்புகளை ஒன்றுடன் ஒன்று கொழுவி இழுப்பர். ஒரு கட்சியின் கொம்பு முறியும் வரையும் இந்த ஆட்டம் நடைபெறும். தோற்றவர் வென்றவர்களின் ஏவலாளர் போல் நடத்தப்படுவர்.

உதாரணமாக கொம்பு முறிப்பாடலின் ஒரு பகுதி உதாரணமாகத் தரப்பட்டுள்ளது.





RangaRakes Tamilnavarasam.com

**கொம்பு விளையாட்டு**

கோலப் பணிச்சேலை கொய்துடுத்துக்
கொம்பு விளையாட்டுக்குப் போகையிலே
வேலப்பா வந்து மடிபிடித்து
மெத்தவும் சிக்சிக் கொண்டார் தோழி

வேறு.

வட சேரியான் கொம்பு எங்கே எங்கே?
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென் சேரியான் கொம்பு எங்கே எங்கே?
செம்பரப் பற்றைக்கு உள்ளே உள்ளே.

**கோலாட்டம்**

கோலாட்டமும் கும்மி போன்று பெரும்பாலும் பெண்களுக்குரிய ஒரு விளை யாட்டாகும். கும்மியில் கைகளினால் தாளத்தைத் தட்டிக்காட்டுவர். கோலாட்டத்தில் சிறு வர்ணக் கோல்களாலே தட்டி ஆடுவர். கிராமியப்பாடல் ஆடல் வகைகளுள் கோலாட்டமும் ஒன்றாகும். கலைவிழாக்களிலும். கோயில்களிலும், திருவிழாக்களிலும் கோலாட்டம் ஆடுவது வழக்கம்.





RangaRakes Tamilnavarasam.com

கோலாட்ட வகைகளில் பின்னற் கோலாட்டம் என்று மற்றுமொரு வகையும் உண்டு. பல்லக்கின் முன் கொம்பில் பல வர்ண நாடாக்களைத் தொங்கவிட்டு அவற்றின் நுனிகளைக் கோலாட்டக் கோல்களில் பொருத்திச் சுற்றி ஆடுவார்கள். அப்போது அந்த வர்ண நாடாக்கள் முதலில் பின்னலைப்போல் இணைவதும் பின்பு அவிழ்வதுமாயிருக்கும். இவ்வகை கோலாட்டங்களை ஆடும்போது எண்ணிக்கைக்கேற்ப நிதானமாக ஆடுதல் வேண்டும்.

கும்மி கோலாட்டங்களிற் பலர் சுற்றி ஆடும்போது அமையும் கோலங்கள் பலவகைப் பட்டனவாயும் எழில் மிகுந்தவையாகவும் இருக்கும்.

தற்போது பரதநாட்டியத்தில் உள்ள அடவு வகைகளுக்கு ஒப்ப பாமர நடனங்களிலும் தட்டடவு, குதித்தடவு முதலிய கால் வேலைப்பாடுகளும், பதாகம், அஞ்சலி, சிகரம் முதலிய முத்திரைகளும் எளிய நடையில் லாவகமாய் அமைந்திருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது.

**ஊஞ்சற் பாடல்**

சிவராத்திரி விரத காலத்தில் ஊஞ்சல் ஆடும் வழக்கம் இலங்கையிலே சைவமக்கள் வாழும் கிராமங்களிலே தொன்றுதொட்டு இருந்து வந்தது. இன்றும் இவ்வழக்கம் சிற்சில கிராமங்களில் இருந்து வருகிறது. இங்கு உதாரணமாகத் தந்துள்ள ஊஞ்சற் பாடல் இன்றும் யாழ்ப்பாணத்தில் பூநகரியில் வழக்கத்தில் உள்ளது.





RangaRakes Tamilnavarasam.com

சிறுவர் விளையாட்டுப் பாடல்களாயுள்ள ஊஞ்சற் பாடல்களும் உள. விளையாட்டுத் தவிர திருவிழாக்களில் திருக்கல்யாண உற்சவ காலங்களில் இறைவனையும், இறைவியையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டும்போது பாடப்படும் ஊஞ்சற் பாடல்களுமுள. இவ்வகை ஊஞ்சற் பாடல்கள் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பற்றியும் தலம்பற்றியும் புகழ்ந்து பாடுபவனவாக அமைந்திருக்கும். சமூகத்தில் திருமண விழாக்களிலும் தம்பதியரை ஊஞ்சலில் வைத்து வாழ்த்தும் வழக்கமும் இருந்துள்ளது. திருவாசகத்தில் பொன்னூஞ்சல் பாடப்பட்டிருப்பதை நாம் நோக்கும்போது அக்காலத்தில் பேணப்பட்ட கலாச்சாரத்தின் பின்னணியில் இவ்வகைப் பாடல்களை நாயன்மாரும் ஆழ்வார்களும் இறைவன் மேல் ஏற்றிப் பாடியதை உணரக்கூடியதாக இருக்கிறது.

**ஊஞ்சல் பாடல்**

உதாரணம்

தந்தன தனாதன தனாதன தனானே
தனா தனாதந்த னாதந்த னானே

வாருமடி தோழியரே நாங்களிருவரும்
வந்த சிவராத்திரியை சிந்தையுடன் நோற்போம்
கச்சாயிற் புளியிலே ஊஞ்சாலும் கட்டி
கனகனா தெருவிலே கூத்துமொன்றாடி

கண்ட பிணி கொண்ட வலி கால் மாறி ஓட
கண்ட சிவராத்திரியை காதலுடன் நோற்பாய்

ஏறுமயிலேயி விளையாடி மலை தோழி
இரணியனைக் கொன்ற மலை தெரியுதடி தோழி
விளையாட வெகு துயரம் வருகுதடி தோழி
மெதுவாக ஊஞ்சலைத் தணியுமடி தோழி

## நாடக இசையின் கலாச்சாரப் பின்னணி
## நாட்டுக்கூத்து (கலாச்சாரப் பின்னணி)

ஆடலும் பாடலும் சேர்ந்து பார்ப்போருக்கும் கேட்போருக்கும் இன்பமூட்டவல்லன நாட்டுக் கூத்துக்களாகும். இக்கூத்துக்கள் படிக்கத் தெரியாத பாமர மக்களும், தொழிலாளருக்கும் நல்லறிவு புகட்டுவதோடு நமது பாரம்பரிய புராண இதிகாசவரலாறுகள் என்பவற்றை இலகுவான நடையில் கவர்ச்சிகரமாக எடுத்து விளக்குவதாகவும் அமைந்துள்ளன. சமயக் கருத்துக்களை முன்வைத்தல் முக்கிய நோக்காகக் கொண்டு இவை எழுந்தன என்றும் கூறலாம். தொகையின் அளவு கொண்டு



RangaRakes Tamilnavarasam.com

பார்க்கும் போது ஈழத்துத் தமிழ் நாட்டுக் கூத்துக்களில் அதிக நாடகங்களை ஆக்கியவர்கள் கத்தோலிக்கத் தமிழர்களே. சைவத்தமிழர் கூத்துக்கள் அளவிற் குறைந்தனவாகக் காணப்படுகின்றன. இரு சாராரது கூத்துக்களிலும் சமயச்சார்பு மேலோங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஈழத்துத் தமிழரது கலைகளின் இன்றியமையாத கூறாகிய நாடகம் நீண்ட காலமாக நாட்டுக்கூத்து நிலையிலேயே வளர்ந்து வந்திருக்கின்றது. நவீன நாகரிகத்தின் செல்வாக்கினாலும் கிராம வாழ்க்கையின் சிதைவாலும் இந்நாட்டுக் கூத்து மரபு நலிவுற்றபோதும் இன்றும் இவை முற்றாக அழிந்துவிடவில்லை.

ஈழத்திலே நாட்டுக்கூத்துக்கள் எக்காலந் தொட்டு ஆடப்பெற்று வருகின்றன என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. எனினும் ஒல்லாந்தர் ஆட்சிக்கால இறுதிப்பகுதியாகிய 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இருந்து ஆங்கிலேயர் காலப் பிரிவாகிய 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை பல. நாட்டுக்கூத்துக்கள் எழுதப்பட்டும் மேடையேற்றப் பட்டும் வந்துள்ளன என்பதை உறுதியாகக் கொள்ளலாம்.

இன்று நமக்கு கிடைத்துள்ள நாட்டுக் கூத்துக்களுள் மிகப்பழமையானவை எனக்கொள்ளத் தக்கவை மார்க்கண்டன் நாடகம் வாளபிமன் நாடகம் என்பனவாகும். இவற்றை எழுதிய வட்டுக்கோட்டை கணபதி ஐயரின் காலம் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும்.



RangaRakes Tamilnavarasam.com

சமுதாயத்தில் சாதிப்பிரிவுகளும் சமயப் போராட்டங்களும் உச்சக்கட்டத்தை அடைந்த ஒரு காலப்பிரிவிலே இவற்றின் தாக்கத்தினால் மக்கள் அவலமடைந்தபோது அவர்களின் உள்ளக் குமுறல்களையும் விருப்பு வெறுப்புகளையும் வெளிப்படுத்தும் சாதனங்களாகக் குறவஞ்சியும் பள்ளும் புலவர்களாற் படைக்கப்பட்டன. இவற்றுடன் நொண்டி நாடகம் என்றும் வரிக்கூத்து வகையைச் சார்ந்த பிரபந்தம் ஒன்றும் அக்காலத்தில் வழக்கிலிருந்தது. இவற்றின் தொடர்ச்சியாகவே நாட்டுக் கூத்துகள் தோன்றின.

நாட்டுக்கூத்துக்களின் முக்கிய இயக்குனர் அண்ணாவி ஆவார். இவர் சல்லரியைக் கையிற் கொண்டு கூத்தைப் பழக்குவார். இவருடன் மத்தளம் வாசிப்பவரும் பக்கப்பாட்டுப்பாடுபவரும் இருப்பர். இவர்களைச் சபையோர் என்பர்.

நாட்டுக்கூத்து மேடையேறு முன்பு சில நடைமுறைகள் பேணப்படுகின்றன. அவை

1. சட்டங் கொடுத்தல்.
2. சதங்கை அணிவித்தல்.
3. அடுக்குப் பார்த்தல்.
4. அரங்கேற்றம்.

நாட்டுக்கூத்து அரங்கேற்றம் முடிந்த அடுத்தநாள் ஊருக்குள் சென்று வீடு வீடாகச்சென்று ஆடி மகிழ்வர் அச்சந்தர்ப்பத்தில் கிடைக்கும் சன்மானத்தை அண்ணாவியாருக்குக் கொடுப்பர். இனி நாட்டுக் கூத்துக்களில் வடமோடி தென்மோடி என்னும் இருவகைக் கூத்துக்கள் பற்றிப் பார்ப்போம். உடை, பாடல், தாளம், ஆட்டம் போன்றவற்றிலேயே இரண்டு வகைக் கூத்துக்களுக்கும் வேறுபாடு காணப்படுகின்றது.

| | வடமோடி | தென்மோடி |
|---|---|---|
| 1. | வடமோடியினரின் உடுப்பு கரவுடுப்பு எனப்படும். இது மிகவும் பாரமானது. கண்ணாடி ஜரிகை மணிகள்பதிக்கப்பட்டு அழகாக இருக்கும். முடிகள் ஆபரணங்கள் யாவும் பாரமானவை. | தென்மோடியில் உடை இலகுவானதாக இருக்கும். மணிகள் மாலைகள் அணிவிக்கப்படும் பூ முடி ஆபரணங்கள் பாரமற்றவை. |
| 2. | வடமோடியில் ஆட்டம் இலகுவானது. | தென்மோடி ஆட்டம் மிகவும் கடினமானது |
| 3. | காலமேற்றுதல் இங்குண்டு. | காலமேற்றுதல் இல்லை. |
| 4. | வடமோடியில் வரவுப்பாடலைத்தாமே பாடுவர். | இங்கு வரவுப்பாடல் சபையோரால் பாடப்படும் |
| 5. | வடமோடியில் தருப்பாடல் இல்லை. | இங்கு தருப்பாடல் உண்டு. |
| 6. | வடமோடியில் வலப்புறமாகச் சுற்றி ஆடுவர். | தென்மோடியில் இடப்புறம் சுற்றி ஆடுவர் |
| 7. | வடமோடியில் விருத்தங்கள் நீட்டி முழக்கிப் பாடப்படுவதில்லை. | ஓசை புறப்பட இழுத்துப்பாடுவது வழக்கம் |



RangaRakes Tamilnavarasam.com

மட்டக்களப்பு மாநிலமெங்கும் ஆடப்பட்டு வரும் வடமோடி தென்மோடி நாட்டுக் கூத்துக்களுக்கும், மன்னார், சிலாபம், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் ஆடப்பட்டு வரும் நாட்டுக்கூத்துக்களுக்கும் இடையே சிற் சில வேறுபாடுகள் தாளம், இராகம், பாட்டு என்பவற்றிடையே காணப்படும்.

ஈழத்தின் இருபெரும் தேசிய இனங்களான சிங்கள இனத்திற்கும் தமிழ் இனத்திற்கும் இடையே கலாசாரப் பரிவர்த்தனை நெடுங்காலமாக நிகழ்ந்து வந்துள்ளது. ஆடலும், பாடலும் சேர்ந்த ஒருவகை சிங்கள நாட்டுக்கூத்தான நாடகம் தமிழில் இருந்து பெறப்பட்டதாகும். இதனை சிங்கள மொழிக்கு அறிமுகம் செய்தவர் பிலிப்பு சின்னோ என்பவர்.

சிங்கள நாடகம் மன்னார் நாட்டுக்கூத்தை பின்பற்றியது. சிங்கள நாட்டுக் கூத்துக்களில் வாசிக்கப்படும் ஒருவகைப்பறைக்கு "தெமளபறயோ" என்ற பெயர் உண்டு. இது தமிழ் பறையாகிய மத்தளத்தைக் குறிக்கும்.

இவ்வாறு தமிழ் நாட்டுக்கூத்தானது தேசிய தன்மை வாய்ந்த கலை வடிவமாக ஈழத்திலே வளர்ந்து வந்துள்ளது. தமிழ் கிராமங்களிலே செழித்தோங்கிய இக்கூத்துக்கலை இந்நாட்டு நாகரிகத்தையும், பண்பையும், உயிரையும் ஓம்பி வளர்த்து வந்துள்ளது. இயற்கையோடு இணைந்த வாழ்வென்னும் உயிரூற்றுடன் ஒன்றி நின்று நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் தமது நாடகங்களையமைத்துள்ளமையால் அவை இன்றும் உயிர்த்துடிப்புடன் விளங்குகின்றன.



RangaRakes Tamilnavarasam.com